ப்ரஹ்மவித்யா.

௩-ம் புஸ்தகம்

பத்திரிகை க்ரயம்
1 வருஷம் 2—12—0
6 மாதம் 1—8—0
3 மாதம் 0—14—0
1 காபி - 0—2—6
இலங்கைக்கு 3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

௰௨-ம் இலக்கம்

பத்திரிகைப் பணத்தை மணியார்டராகவாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௮ஸூ டிசம்பர்மீ ௧௩ சர்வதாரிஸூ மார்கழிமீ ௨௨

விஜ்ஞாபநம்

[illegible]

விக்கிரகாராதனம்,

தமது பத்திரிகையில் ஆரியசமாஜத்தவர் கேள்விகளையும், அதற்குத் தாங்களே விடையளித்த விஷயங்களையும் கண்டெளித்தேம். இவ்விஷயத்தைப்பற்றித் தமது பத்திரிகைகளில் யான் முன்னரோ ஓர் உபந்யாச மெழுதியிருக்கின்றேனல்லவா? ஆயினும் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு முறையே விடைபகரவுத்தேசித்து ஈண்டெழுதி முபந்நியாசத்தை அச்சங்கத்தார் நோக்குமாறு செய்வீர்களெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அவர்கள்கேட்ட முதற்கேள்வி இது:—

கடவுளுக்குப் பஞ்சபூதங்களாலமைந்தசரீரம் வேதங்களிலுள்ள மந்திரங்களாற் சாதிக்கவேண்டிய- சரீரமில்லாதவனுக்குளோர் மூர்த்தியைக்கற்பித்தல் பொருந்தாதல்லவோ? என்பன.

இதற்கு விடை:— வேதங்களில், ஈசுவரன் என்றுதொடங்கி இரண்டாங்கேள்வி கேட்கத்துணிந்தவிவர் எதற்கென இவ்வினாவை எழுப்பினரோ அறியேம். இரண்டாங் கேள்விக்கு யாம் பகரப்போகும் விடை ஒன்றே இதற்கும் விடையாகலாம். ஆதலான் யாம்பின் காட்டப்புகும் மந்திரப்பிரமாணங்களைக்கொண்டே இவ்விரண்டு வினாக்களும் விடையளிக்கப்பட்டனவாகக் கண்டொழிக. அன்றியும், கடவுள் என்றுஞ் சரீரமில்லாதவரல்லர். அவருக்குத்தமதிச்சையின்படி தொண்டர்கருத்துக்கியைய அநேக சரீரங்களுண்டு; இனிச் சரீரமில்லாதவரெனப் போற்றுமறைகளின் கருத்து யாதெனில், "இய[illegible]வர்கள்" யஜீவர்களைப்போல கன்மத்திற்கேற்ற காயம் பெறுத[illegible]ன்றார்— எனபதே. அதுகொண்டே மரீசிமகரிஷி போற்ற[illegible]
"எக்தெந்த வுருவ எண்ணத்தில் உதிக்குமோ, [illegible]ந்தந்த உருவங்கொண்டு அருளபுரிவான் ஹரி" என்பது.

(2) வேதங்களில் ஈசுவரனுக்குக் கால்முத[illegible]லியவற்றால் உருவஞ்செய்தாராதிக்கும் விதியுளதா? இருப்[illegible]ன், நான்குசங்கிதைகளின் மந்திரங்களால் விளக்கவேண்[illegible]. ஈசுவரனுக்கு

[illegible]

உருவம் மனிதனைப்போ லமைக்கவேண்டுமோ? வேறு? கடவுளுக்குள்ள அவயவங்கள் எவ்வளவு?

விடை:— கடவுளுக்குப்பிம்பத்தில் அர்ச்சனையை விதிக்கும் ருக்குவேத மந்திரம் இஃதென்று வைகானசத்தில மரீசிமகர்ஷி எடுத்தோதினர்; அதாவது:— '[illegible]' என்று இம்மந்திரத்தால் கடவுளுக்குப் பிரதிமாரூப முண்டென்று குறிக்கப்படுகின்றது. அருட்குணமிருப்பின் அவருக்கு ஸ்நானமுதலிய உபசாரங்கள் கூடாதாகலின் அவ்விதமே. பிருகுமகர்ஷியும் கடவுளுக்குச் சாலமுதலியவற்றால் உருவஞ்செய்து பூஜித்தலுக்கு விதியாக '[illegible]' என்னுமிம்மந்திரத்தை விரித்துரைத்தனர். இம்மந்திரம் பிம்பாராதனத்திற்குப் பிரமாணமென்று சைவாகமங்களிலும் எடுத்திருப்பதாகவறிகிறோம். வேதபாஷ்யகாரர்கள் இம்மந்திரத்திற்குப் பொருள் வேறுவிதத்திருப்பினும், இமயகார்ஷிகளெடுத்த இப்பொருளை அது மறுக்க வலியதன்று. இனி மற்றோர் மந்திரமும் ஈசுவரனுக்குப் பிரதிமாராதனத்தைக் குறிக்கின்றது. '[illegible]', ஸ்ரீ மாதவாசாரியர் பராசரஸ்மிருதி எட்டாவது அத்தியாயத்திலுள்ள '[illegible]' என்று தொடங்கிய சுலோகத்திற்குப்பொருள் கூறுமிடத்து இதன்பொருளை எடுத்துக்காட்டியிருக்கின்றார். எங்ஙனமெனில், "கண்ணிற்குற்றம், உடையற்றமற்றவர் பெண்டிரைக்காணடல், தேவர்களின் குற்றம், மால்முதலிய தேவர்களைக் கண்டும் பணியாதிருத்தல்,, என்பது. இனி கடவுளுக்குப் பிரதிமாரூபமில்லையாயின், அவரைக் காண்டல் எங்ஙனம்? பணிதல் எங்ஙனம்? ஆதலால் முற்கூறிய விஷயத்தில இதுவுமோர் பிரமாணமாகும். அன்றியும், '[illegible]' என்னுமந்திரம் கடவுளுக்கு நிவேதனஞ்செய்த வத்துக்களை உட்கொள்ளவேண்டுமென்பதற்கும் பிரமாணமாக பிருகுமகரிஷியால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இதனுனும் கடவுளுக்குப் பிம்பரூபமுண்டென வெளியாகின்றன்றோ? இவ்விதப் பிரத்தியக்ஷ சுருதிகளாலும், ஏனையவைகளாலும் பிரதிமாபூஜையெடுத்தோதப்படாவிடில், சர்வவேதங்களையுங் கற்றுணர்ந்த ஸ்ரீவாதராயண முனிவர் தாமெழுதிய ஸ்ரீ மகா பாரதசங்கிதையில் '[illegible]' என்று தொடங்கி இப் பிம்பாராதனத்தை விதிப்பர். மனு என்பவருங்கூட பிராமணர்களுக்கு வேதோக்தமான கருமங்களை போதமிடத்து இப் பிம்பாராதனத்தை எடுப்பர். இவ்வைதிக கர்மங்களையே மூலமாகக் கொண்டெழுந்த வைகானச சாஸ்திரம் இங்கு ஆலயங்களில் பூஜைகளை விதிக்கும். இம்மட்டிலோ! '[illegible]

[illegible]

[illegible]

ணுலீகுவணவக்ஷிணீ 'என்றற்றொடக்கத்தால் சாந்தோக்கிய உபநிடதம்முதலிய வாக்கியங்களாலும் பிறவாற்றாலும் பெரும்பான்மையாய் மனிதன் போன்றவுருவமேகடவுளுக்கு அமைக்கவேண்டியதாக ஏற்படுகின்றது. எல்லாமறிந்தபெரியோர்களும் சிற்பம் ஆகமமுதலிய சாஸ்திரங்களில் கடவுளுக்கு மனிதனைப்போன்ற உருவங்களையேவிதித்திருக்கின்றார்கள். அங்கு தானே அவயவங்களையுங்கணக்கிட்டிருக்கின்றார்கள்.

3. வேதங்களில் கடவுள் உணர்ச்சியுள்ளவனென்றா? அல்லவனென்றா? முற்கூறியதாயின், அவனுக்கு எவன் பூஜைசெய்தால் நற்கதியுண்டாகும்? பிற்கூறியதாயின், அவருக்குப்பசிநீர நிவேதனமுதலியவை செய்தல் வேதவிருத்தமன்றோ.

விடை;—ஈசுவான் உணர்ச்சியுள்ளவனென்று கூறப்பாலதாய அறிஞா ஒருவருமில்லை. ஆயினும், ஐசுவரியம் நிறைந்த ஓர் அரசன், தம்மிடம்வரும் மனிதர்கள் கொடுக்கும் சிறிய எளிமிச்சம்பழமுதலியவைகளைப்பெற்று அவர்களிடக்கருணை புரிவதுபோல, பரமேசுவரனும் பக்தர்களளிக்கும் சிற்றுபசாரங்களை யடைந்து அவர்களிடக்கருணை புரிவானென்பது.

4. காற்று நுழையவிடமில்லாத கருங்கல்லின்கண் பிராணவாயுவானது உட்செல்லுகின்றதென்பதை வேதமந்திரங்களாலும், யுக்திகளாலும் நிலைநாட்டவேண்டுமென்பது.

5. "எந்த மந்திரங்களில் உபாசகர்கள் கற்களில் பிராணப்பிரதிட்டை செய்கிறார்களோ", அம்மந்திரங்களுக்குப்பொருத்தம் ஆறு சாஸ்திரங்களிலுள்ள பிரத்தியக்ஷமுதலியபிரமாணங்களாலெடுத்துக்காட்டவேண்டும்.

6. இவ்விஷயத்தில் பாவனைமாத்திரமே என்றால் அஃது நன்றோ? அல்லது தீதோ?

இவைகளுக்குவிடை:—— [illegible]

அவைகளைச்சிருட்டித் ததனுட் புகுந்தான்; உலகெலாங் கடந்தவனுள்ளத்திற் புகுந்தான்; எல்லாவற்றையுந் திருமேனியாகப் பெற்றனன்; "என்றற்றொடக்கத்தால் எங்கும் நிறைந்துள்ள அப்பொருளுக்குப் பிரதிமையின்கண் பிரதிட்டை யென்றால் அவ்விடம் பாவினதாகிய ஓர் ஸம்ஸ்காரமேயன்றி வேறல்ல. எங்கும் நிறைந்த அக்கினியை அரணியின்கண் கடைந்தெடுத்தற்போல, எங்கும்பரிபூர்ணமாகிய வாயுவை ஓரிடத்தில் விசிரியால் வெளிப்படுத்தற்போலுமென்க. இஃது தக்கபாவனையே. சுருதிஸ்மிருதி இதிகாசமுதலிய பற்பல பிரமாணங்களாலெடுத்தோதலினென்க. இனி பரிபூர்ணனாக அப்பரம்பொருளைப் பாவித்தலைவிட்டு ஏன் ஒருசிறு பிம்பத்தில் பாவிக்கவேண்டுமெனின், கூறுதும்; அவ்விதப் பாவித்தல் யோகிகளுக்கே முடியுமன்றி நம்மவர்களைப்போன்ற விஷயவாசனை யுள்ளவர்களுக்கு முடியாது. அதுகொண்டே "யோகிகள் அப்பரம்பொருளை அருபமாய்ப் பாவித்தற் குரியவராதலால், மற்றவர் உத்தேசித்து இப்பிம்பாராதனாதிகாரம் எடுத்தோதப்பட்டதென்க,, என்று மூதறிஞர் கூற்று. அவ்விதமே மரீசிமகரிஷியும் கடவுள் "சகள

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மென்றும் நிஷ்களமென்று மிருவகைரூபம் பெற்றவரென்றார். அதில் நிஷ்களமென்பது பாலில் நெய்போலவும், எள்ளில் எண்ணெய்போலவும், புஷ்பத்தில் நன்மணம்போலவும், கனியில் ரசம்போலவும் எங்கும் நிறைந்திருக்கும். பிரிதொன்றோவெனில், தொண்டர்கள் கருத்திற்கிசைய திருவாய் திருச்சின்னங்கள் முதலிய பல இலக்கணங்களுடன் தோன்றும்நிஷ்களம் யோகிகளால் தியானிக்கப்பாலது. சகளம் எல்லோரும் தியானிக்கக்கூடியது. நிற்க, அத்திரிமகரிஷி சர்வவியாபகனான ஈசுவரன் பிம்பங்களில் ஆவிர்ப்பவிப்பான் என்பதற்குப் பற்பலபிரமாணங்களை எடுத்தோதியிருக்கின்றார். அவைகளை வருமாறுகாண்க:— ‘[illegible]’ யாமெடுத்துக்கூறியவிடைகளால் ஏனையவினாக்களு மறுக்கப்பட்டனவென்றறிக. மீண்டும் அவர்களுக்காசங்கைகளுளவேல், அவைகளை அவர்கள் வெளியிட்டால் எம்மாலக்கத்திற்கெட்டியமட்டும் அவைகளுக்கு விடையளிப்பாம். விரிவாற்பயனென்னை? விட்டுணுவைப் பிம்பத்தில் ஆராதித்தல் வைதிகமென்பதிற் றடையில்லை. அதுகொண்டே கூர்மபுராணத்தில் ‘[illegible]’ வைதிககர்மங்களுள் விண்டுவின் ஆராதனத்தின்வேறாய உத்தம காமமொன்றிலது. ஆனால், முக்காலமும் ஹரியையாராதித்தல் வேண்டும்,, என்று வசனமிருக்கின்றது. அநேக தர்மசாஸ்திரங்களில் இப்பிம்பாராதனம் விதிக்கப்படுகின்றது. அநேக கர்மங்கள் தேவாலயங்களில் செய்யவேண்டுவதாகப் பலசுருதிகளிருக்கின்றன. ஆரியர்கள் அநேகர் இப்பொழுதுந் தவறாது அநுட்டித்துவருகிறார்கள். இவ்விக்கிரகாராதனத்தால் நற்கதிபெற்றவ ரனேகர் புராணங்களில் புகழப்படுகின்றார்கள். இனி விரிக்கிற்பெருகும்; ஆத்திகர்காள்! இனி இவ்விடயத்தில் ஐயமுறவேண்டாம்; இஃதுவோர் உத்தமவைதிகம்; முற்றிலும் குற்றமற்றது.

(மொழிபெயர்ப்பு) இங்ஙனம்

இலத்தூர் சுந்தரராஜசாஸ்திரி.

திருச்சியில் ஆரியதத்துவகலாசாலையின் அவயவிகளளித்த வந்தனோபசாரப் பத்திரிகை.

மகா சனம்பொருந்திய ஐயா,

இப்பாரதகண்டத்தில் வசிக்காநின்ற நம்மனோரைத் தம்முடன் பிறந்தவர்போ லாதரித்தும், அறிதற்கரிய திருமறைகள்முதலிய நன்னூல்களினுண்மைகளை உணர்ந்துய்த்தும், ஆங்கிலேயராக்ஷியில் வளர்ந்தோங்கும் அப்பாஷையின் பயிற்சியால் நிலைபெற்றவரும் நாத்திகத்தை வேரறுக்கும் பெருங்கரு

[illegible]

[illegible]

வியாபகின்றனதும், மன்றமுமவுகளிர்றேன்றம் ப்ரம்மவித்தையே இஃதென ஐயமுற வெளிவந்துலாவும் "ப்ரம்மவித்தியாபத்திரிகையை,, வெளியிட்டதினால் பெற்ற பெரும்புகழை எமது தென்னாட்டில் நிரப்பியும், தேனிலுமினிதான தெனமொழி வடமொழி இவைகளால் நிறைந்த பெருபாண்டியாசங்களால் போற்றலபெற்றவரான மற்றவர் போற்றும் நிலைமை பெற்றவருமான தமது சன்னத்தின்முன் எமதுள்ள அறிவிற்கெட்டாத சொல் இனிமையற்றதும், குழவிகளின் சொற்போன்றதுமான இத்திரிசிரபுர ஆரியதத்துவ வித்தியாசாலா அவயவிகள் எழுதிக்கொள்ளும் விண்ணப்பம் எத்தன்மைத்தெனின்: பாற்கடலில் ஓர்பலஞ் சற்கரையிட்டு அதற்கினிமையுண்டாக்குவதுபோலும், அல்லது சங்கநிதி, பதுமநிதிகளுக்கு ஓர் பொற்காசை ஈந்து விருத்திசெய்வதுபோலும், ஓர் சிறுவிளக்கால சூரியனுக்கொளி கற்பிப்பதுபோலுமாம். ஆயினும், பற்பல பத்திரிகைகளை வெளியிட்டும், பற்பல வுபந்நியாசங்களைப்புரிந்தும், சிறு துண்டுபத்திரிகைகள விநியோகஞ்செய்தும் இன்னும்பல முயற்சிகளால் நமது மதத்தைப் பிடித்த பெரும்பிணியை அகற்றும் பண்டிதர்போன்ற பண்டிதமணியாய தங்களைக்கண்டு எம் உள்ளங்களித்து உற்சாகம் மேலோங்கி நாவும நவிலுகின்றது. முற்காலத்தில் நமதுமதம் சாஸ்திர யுக்தி அநுபவங்களுக்கு இயன்றதாகவிருந்து நமது வர்ணங்களுக்கு இடையிலும் பரமையிலும் சுகத்தையே கொடுத்துவந்ததென்பதை அறிந்த தம்மிடமெடுத்தோதுவது "கூறியதைகூறல்,, எனனுங்குற்றமாகுமன்றோ? இவ்விந்துக்களின் மதம் எல்லாவற்றிலுஞ் சிறந்ததாதலாலும், இதைவிட்டகன்றவர் மீண்டுமிதையடைவது மிகக் கடினமாதலாலும், இம்மதத்தை எவ்விதத்தாலும் துலைத்துத் தம்மதத்தை நிலைநாட்ட மற்றவர் முயல்கின்றார். அங்ஙனமன்றோ இப்பரதகண்டத்தில் அறநெறி பூப்தே விரதமாகக்கொண்ட 'தாரகன்' 'இராவணன்' முதலிய அசுரர்களுக்கு இரக்கதர்களால் அதிகமான ஓர் பீடையுண்டாகவும், அயன் முதலிய பல அமரர்கள் சிறைச்சாலையில் அகப்பட்டுழலவும், மறையோர்கள் நித்திய கர்மங்களிழந்துநிற்கவும், காட்டுத்தீயிற்கட்டுண்ட கலைமானைபோல் அலைபவுமுண்டு நாரணன் முதலிய நம்கடவுளர் கருணைபெருகி இக்கர்மபூமியிலவதரித்து மகோபகாரஞ்செய்து நம்முடைய மெய்மார்க்கங்களை முழுதுங்களிக்க பல நல்வழிகளைக்காட்டினாரகளென்பதை அறிஞர்களுக்கறிவிக்கத்தக்கதோ? பிறகு இப்பரதகண்டத்திற்கு ஓர்விபரீதகாலமெனக்கூறத்தக்க இக்கலிகாலத்தில் "சுத்தோதனன்,, என்னும் அரசனுக்கோர் புத்திரனென்பவன் பிறந்தான். இவனும் சார்வாகனைப் போன்றவனே. இவன் கலிபுருடனுக்குற்ற மித்திரன்; அவர் கண்டுபிடித்த மதம் ஓர்வகை நாத்திகம்; அதுவே இத்தேசத்து அந்தணர் மதத்திற்கு ஆதி அந்தகன்; இஃதிவ்ஙனமாக அவ்வர அக்காலத்து நமது சண்முகர்பிரான் கருணையால் உலகத்தில் ஸ்ரீசங்கரகுரு வென்னுமோர் துறைவிமன்னனவதரித்து ஞாயவாதிலாக அந் நாத்திகத்தை யொழித்துத் தத்துவத்தை விளக்கி அத்வைதத்தை நிலைநாட்டினார். நம்மவருள்ளத்தில் நிலைபெற்றவாழ்ந்த நாத்திகத்தை வேருடன் களைந்தெரிந்த அம்மகானது திவ்விய சரித்திரத்தை அறிந்திலர் இவ்விந்தியாவில் இலர். இவ்வாறு இக்கலி துவக்கியதுமுதல் ஏதோ ஓர் தீவினைப்பயனால் பற்பல தீங்குகளுக்கிடமான எமதுமதம் (இளைத்த திருமேனி இளைப்பகற்ற அருமருந்தை ஈந்து அருட்பெருக்கம்பெற்றாய் துயகிழும் ஓர் வைத்தியனை தேடுவது

[illegible]

போல்தேம்புகின்றது.) அவ்விதமே எமது தீவினைப்பயனாலபுண்ணியக்ஷேத்திரங்கள், ஆலயங்கள், தீர்த்தங்கள் நிறைந்த இக்கர்மபூமி வேறுமதஸ்தர் கையிற் சிக்குண்டு ஆசை நாயகனை விட்டகன்று அசுரர் சிறையில் அகப்பட்ட சிறுமிபோல மது நீதிமறந்து மானங்குலைந்து நாதன் அற்றவள்போல் நலங் குன்றி யிருக்கின்றாள். இக்காலத்துச் சிறுவர்களோ! பற்பல நீதிநியமங்களால அமையப்பெற்று அதிவிசித்திர அலங்கார விளக்கமெய்தி வேத வேதாங்கமுதலிய திருவாடை தரித்து நாடகம், காவியமுதலிய பூச்சுகளால் நன்னுற்றமெய்து தம்மைக்கொண்டவனுள்ளங்குளிர நன்னடை பெற்ற தேவமாது போன்ற வடமொழி என்னுமடந்தையை மணக்காதொழிந்து அங்கிலபாஷையெனனும் பிறிதொருவளை மணந்து அவளுடன்வாழ்ந்து நாத்திகமெனனும் ஒருகுழவியைப் பெற்றெடுத்துச்சீராட்டுகின்றனர்கள். அந்தோ!! முன்னரோ மீளாதப் பிணியிலுழன்றும் ஒருவனுக்கு ஏனைய பதிகேடு பருந்தையைந்தது போல; என்செய்வேம்; இக்காலக்கொடுமையாற்றானே மதஆராச்சியைச் சிறிதும் கவனியாது இளைப்பாறும் எமது இளைஞர்களைக் கிறிஸ்துவமதமெனனுமோர் பெரும் பைசாசம் அஞ்ஞானமென்னும் பேரிருளினைக் கனமிழ்த்தி ஒழியாத தீவினையெனனுமோர் அநாதசர்ப்பங் குடிகொண்ட தம்மதப் பற்றின் வாயிலே மோதுகின்றதே! பாருங்கள்! மேற்றிசையில் ரோமாபுரியில் குடிகொண்ட கிறிஸ்துவ படாதிபதியின் ஆணைச்சீட்டை அடியாகக்கொண்டு அவ்விடம்விட் டிவ்விடம்வந்து பாடசாலைகளை ஏற்படுத்திப்படிப்பினைவாயிலாக விவிலியமெனனுந்தமது மதப்புத்தகத்தைப் போதித்து நமதுமதமின்னதென்றறியாத நம்மக்களை மயக்கிவருகின்றார்கள். இங்ஙனமிருக்க, வடநாடுகளில் சிலர் எவ்விதமேனும் நம்மவருக்கு ஒற்றுமையுண்டாக்கக் கருதி தாம் நம்மதத்திற்பிரியாதல் நமதுவேதங்கள் மனிதர்களால் செய்யப்பட்டதென்றும், மால், அயன், உருத்திரன், இடிக்கொடியோன்முதலிய கடவுளர் உண்மையில் இல்லை என்றும், பாரதம், பாகவதம், சிவரகஸ்யம், ஸ்காந்த முதலிய புராணங்களிற் கூறியவை முற்றிலும்பொய்யென்றும், ஒரேபரமான்மா வழிபடத் தக்கவனென்றும், தமதபிப்பிராயம் இதுவே என்றும், நமதுதேசத்து ஜாதிமதாசாரம் இடையிலேகற்பிக்கப்பட்டன வென்றும் ஒருவாறு கூறி நிற்கின்றனர். வடநாட்டார் இங்ஙனமாக; இனி நன்னாட்டார் நிலைமையைச்சிறிதுகவனிப்பாம். ஐயர்களே! அருமறைகளாகமங்களேந்தி அழகிய நமது ஆரியர்கள்கையில் அசப்பிய விவிலியப்புத்தகங்களை எடுக்கத்துணிந்தார்கள். அம்மனைகளினும், அம்மனைமுடிவுகளிலும் உண்மையை விளக்குவதைக்கே உற்றபயனாகப்பெற்ற நமதுநன்னூலினால் ஐயோ! நாத்திகராக மதோபதேசத்தைச்செய்கின்றனரே! என்செய்வோம்! கண்ணீர் ததும்புகின்றது; கையிற்கோல் நழுவுகின்றது; அநியாயத்தைச் செவியுற்றீர்களா!' அந்தணர்குலத்துதித்து வேள்விமுதலிய நற்கிரியைகளைச் செய்து அக்கினிபகவானுக்குத்திருப்திசெய்வதற்கு மாறாக——வைகளின் மாமிசங்களை அக்கினியிலிட்டுச்சுட் டெரிக்கின்றார்களே! இஃதிங்ஙனமிருக்க, தம் நித்தியகருமங்களை நடத்தவாற்றலற்றசிலர், சத்தியமதத்தவர்களெனப்பொய்நாமஞ்சூட்டி வீணிற் குடிப்பதும்————தின்பதுமே தமக்குத்தொழிலெனக்கொண்டு எரிநரகத்திற்கு ஆளாகிறார்கள். மற்றுஞ்சிலர் காஷாயம், தண்டகமண்டலம் இவைகளயாத்திரையில்தான் துறை

[illegible]

[illegible]

[illegible]

விகளெனக் கருதி இரசவாதமென்றும், வைத்திய மெ[illegible] மந்திரமென்றும், தந்திரமென்றும் பலபொய்வழிகளைக்[illegible] டு நம்மவர்கள் நம்மவர்களையே வஞ்சிக்கின்றார்கள். இ[illegible] மதங்களுக்கு நேரிட்ட துன்பங்களை எடுத்துரைக்க எமது இற கு இடந்தரவில்லை. சொற்சுருக்கமாய்ச் சொல்லுவோமாயின் பிரமதேவனால் கண்டுபிடிக்கப்பட்டு அவருக்குப்பிந்தவராய மனு சூத்திரக்காரர் முக்காலவலிமைபெற்ற அத்திரிமகரிஷி முதலியமூதறிஞர்கள் புகழப்பெற்ற நமது நல்மதம் இக்கிறிஸ்தவர் புன்மதப் பெருவெள்ளத்தால் தாக்குண்டு உள்ளப்பதற வுதிரம்பெருக கழுத்திற் பிராணனைக் கடுகுபோலொடுக்கி நிற்க, "எம்மகானுபாவன் எமக்குப் பிணிதீர்ப்பான்,, என்றெதிர்நோக்கி ஒடுங்கி உயிரைமட்டும் தரித்திருக்கின்றது. இப்பெரும்பிணியை விலக்க சிற்சில அருமருந்துகளுண்டு; அவையாவன:— மதபாடசாலைகளைத் தாபித்தல்; மதங்களையுபதேசிக்கும் வலிமைபெற்ற மகா பண்டிதர்கள் எங்கும் சென்று எம்மதத்தின்மேன்மையை யுபதேசித்தல், அச்சடித்த சிறு துண்டுபத்திரிகைகளை எங்கும் பரவச்செய்தல் எனபன. இன்னும் இப்பிணியை நீக்கும் பலவிதமான ஒளஷதங்களை அறிந்தவர்களுமுண்டு. ஆயாயின், இவ்வருமருந்துகள் ஒவ்வொரிடம் முளைத்து வளருகின்றன. முற்காலங்களில் அசுரர், இராக்கதர், சார்வாகர், பௌத்தர் முதலிய பல நிரீசுவரவாதிகளும் மகமதீயர்கள் முதலிய ஏனைய மதத்தர்களும் இத்தேசத்தை அலங்கோலமாக்க, அவ்வக்காலங்களில் ஸ்ரீ இராம, ஸ்ரீ கௌதம மகர்ஷி, ஸ்ரீசங்கரகுருமுதலாயினோர்களவதரித்து நம்ம மாண்டுவந்ததாக வதந்தி. யா முற்கூறிய மருந்துகளை அபேக்ஷிக்கவேண்டிய இக்காலத்தில் போனர்ஜி முதலியோர்கள் வடநாடுகளிலும், ப்ரம்மஸ்ரீ சிவசங்கர பாண்டியா முதலாயினோர்கள் நடுநாடுகளிலும், தமது சனம் தென்னாடுகளிலும் தோன்றி எமது பிணிகளைத் தீர்க்கின்றதென்பதே எமது துணிபு. இனியாம் இப் புன்மதங்களுக்கஞ்சேன்; இம்மூவருள் முதல்வர் ஆங்கிலேய பாஷையை ஐயமறக்கற்றவர். ஆரியாவர்த்தத்தில் உள்ள பெருஞ்சபையின பேரணியாயுள்ளவர்கள். ஒற்றுமை ஊக்கமென்னும் இருசுமாக்களைப் ஒன்றாயப்பெற்று எழுத்தவளாக்கும் அனைபோன்ற உடற்பியாசத்தால் நமது நாட்டின் ஆக்ஷியைச் சீர்திருத்த முயன்றவர். மற்றவரோ! மதோபதேச சர்வகலாசாலையைத் தாபிக்க தீக்ஷைபெற்று "இந்து லகுலேக சங்கம்,, (Hindu Tract Society)) க்கு அக்கிராசனாதிபதியாகிப் புன்மதப்பைசாசங்களையோட்டு மந்திரஞ்செய்பவர். தமது சனமோ! வேதங்களிலும் புராணங்களிலும் உள்ள உட்கருத்துகளை "ப்ரம்மவித்யா,, எனனும் நங்கையின் வாயிலாக நம்மவருக்கீந்து முற்கூறிய சங்கத்தின் வேளியூருபாக்கிராசனாதிபத்தியத்தைப்பெற்று இததெனனுடை யெனடாக்கி அதிவிசித்திரங்களாகிய வுபன்னியாசங்களால் சீர் திருத்துவதைத் தொழிலாகக்கொண்டவர்கள். இவ்விதமகாபுருடரெனக் குறிக்கத்தக்க சிவசங்கர பாண்டியா, தாங்கள், இன்னும் தங்களைப்போன்ற பலபுருடர்கள்கூடிய பேர்க்குறித்த சங்கம் ஒன்றைவிட்டு, இவ்விதப் பிணியால் பீடிக்கப்பட்ட எம்மதத்தை அரோகதிடகாத்திரஞ்செய்பவலிமைபெற்றவர் வேறொருவருமில்லை. உலகெலாஞ்சூழ்ந்து உயிர்களின் கண்களைப் படர்ந்து மறைக்கும் பேரிருளை விலக்க எமது கதிரவனல்லாமற் மற்றைக் கைவிளக்குப் பயன்படுமோ? மற்ற; சிறுபுல்லுகளெனும் ஒன்றாகூடி ஓர் பெரும வட

[illegible]

[illegible]

[illegible] (Hindu Tract Society) [illegible]

க்கயராய் ஆனைகளையுங்கட்ட ஆற்றலெய்துமென்றவாறு, யாம் சிலர் ஒன்றுசேர்ந்து இந்நகரின்கண் அத்வைதமதத்தை வெளியிடவும், நம்முன்னோர் மாண்பை விளக்கவும், நமது புராண முதலிய நன்னூல்களைப்போதிக்கவும், ஏனையவர் மதத்திலுள்ள குற்றங்களைவெளியிடவும் உத்தேசித்து "ஆரியதத்துவவித்தியாசாலை,, என்னுமோர் மகுடத்தைச்சூட்டி ஓர் பாடசாலையை நாட்டி அதிற்சில பண்டிதர்களையுமமைத்து அங்குநூற்றுக்குமேலடங்கிய பிள்ளைகளையுங்கூட்டி எம்மதவிஷயங்களைப் பற்றிப் பொதுவாகப் போதித்துவருகின்றோம். ஏனையமதத்தின் குற்றத்தையறிந்தவரும் தேவபாஷை, தேசபாஷை, ராஜபாஷை இம்மூன்றிலும் பயிற்சிபெற்றவருமான பண்டிதர்கள் இப்பாடசாலையிலுபாத்தியாயர்கள். அவர்களுபதேசிப்பதோ! வேதவேதாங்கங்களிலுள்ள இரகசியம்; அவர்கள் கண்டிப்பதோ! கிறிஸ்தவர், நாஸ்திகர் முதலிய துன்மதங்கள்; அவர்கள் வெளியிடுவதோ! நீதிசாஸ்திரம்; ஒவ்வோர் நிமிஷத்திலும் பெருக்கமடைந்து கிறிஸ்தவர் நிலைபெறும் இத்திரிசிரபுரத்தில் இத்தகைமையான மதபாடசாலையொன்றிருக்கவேண்டுமென்றே உண்மை ஆரியர்களினுட்கருத்து. இதன் கருத்து நிலைபெற இவ்வூரிலுள்ள சிலதனவான்களினுதவியால் இத்தருமத்தை இதுகாறும் நடத்திவருகிறோம். இப்பாடசாலைக்கு அவ்வக்காலங்களில் வேண்டிய செலவுகளுக்கும், பிள்ளைகளுக்கு உற்சாகமுண்டாகவேண்டியீயவேண்டிய நன்கொடைகளுக்கும் மதபுத்தகங்கள் அநேகம் வாங்கிவைப்பதற்கும் ரூபா ஆயிரத்திற்கு மேல் வேண்டியிருக்கின்றது. இவ்விஷயத்திலநேக ஆரியர்கள் உபகரித்தார்கள். சிலர் உபகரிக்கிறதாக வாக்களித்தார்கள். யாமேற்படுத்திய இப்பாடசாலை நிலைபெறவும் அதற்குவேண்டிய பொருளுதவியுண்டாகவும், பெரியோர் இதைப்புகழச்செய்யவும், இந்து மதவுத்தாரணத்தையே தொழிலாககொண்ட தம்பாலுய சிவசங்கர பாண்டியா அவர்களாலும் நடத்தப்பட்டுவரும் "இந்துலகுலேகசங்க,, மென்னும் (Hindoo Tract Society) சங்கத்தின திராபபத்திரிகை வேண்டுவதவசியமன்றோ. ஏனெனில், மதியிலாது நக்ஷத்திரங்கள் இரவுக்கணிபாகா நீர் நிரம்பாதவாம்பலோடை பட்டங்களைப்பெருக்கச்செய்யா. உற்ற குருவனுபதேசமில்லாக்கல்வி உண்மைபயக்கா. ஆதலால் இவ்விஷயத்திற்கெமக்கதிகாரமளிக்கவும், கற்பிக்கும் வழியைக்காட்டவும், துண்டுப்பத்திரிகைகளை எமக்கு இனாமாககொடுத்து அருள்புரியவும், மேற்கண்டசங்கத்தார் கருணையை நம்பி அவ்விடமிருந்து கட்டளையிடப்படுமதிருமுகத்தை எதிர்பார்க்கின்றோம். தாங்களும் தங்கள் சமாஜமும் நீடூழி வாழ்ந்து நிலைபெற பரமபதியாகிய பரமேசுரன் அருளை எதிர்பார்க்கின்றோம்.

திருச்சி.

ஆரியதத்துவ வித்தியாசாலா சபையின் மெம்பர்கள்

ஷை சகைத்தின் அக்கிராசனாதிபதி கணபதிஐயர்.

பாடசாலைஸ்தாபகர்:
பஞ்சாபகேசசாஸ்திரியார்.

தலைமைஉபாத்தியாயர்:
பஞ்சாபகேசஐயர்.

காரியதரிசி:
ஸ்ரீநிவாசஐயர்

மெம்பர்கள்:
கஸ்தூரிரங்கசர்மா
நடேசசர்மா.

[illegible]

[illegible]

[illegible] (Stupid) [illegible]

சரித்திரப்பயிற்சி.

பௌத்தமதம்

(தொடர்பு)

சந்திரகுப்தனும் அவன் மகனும் வேறுமதத்தைச்சேர்ந்தவர்களாயினு, பிராமணர்களை மந்திரிகளாகவும், சபையார்களாகவும், ராஜ உத்தியோகஸ்தர்களாகவும், சமமானம்பெறத் தகுதியானவர்களாகவும் எப்படி வைத்துக்கொண்டிருக்கக்கூடும்? மௌரியவம்சத்தின் முதல் இரண்டாவது அரசர்களாயினும் சுவதர்மாசரணையை நடத்தக் கண்ணுள்ளவர்களாயினும். இந்தவம்சத்தில் மூன்றாவது அரசன் அசோகனென்பவனொருவன் "பிரியதேசி" என்னும் பட்டணத்தைவைத்துக்கொண்டு, தானே தன்னை இரண்டாவது புத்தனாய் நினைத்து வெகுபணச்செலவு செய்தும், தனக்குத்தெரிந்த எல்லா சபர்த்தத்துடனும், மிகத்திறமையுமுள்ள மஹோபதேசாசாரியர்களைக்கொண்டும், இதற்குமுன் காணப்படாததும், மற்றவர்களால் அடக்கமுடியாததும், வேறொருவனாலும் சாதிக்கத் தகாததுமான அதிகப் பிரயாசைப்பட்டு இந்தியா முழுமையும் புத்தமதத்தைச்சேர்ந்ததாகச் செய்ய முயன்றான். பிதாபிதாமகன் இவர்கள் சுதந்திரர்களாக இருக்கையில் இந்த அசோகன் மட்டும் பௌத்தனாய் மாறினது என்ன காரணத்தினாலெனிலோ, இந்தவிஷயத்தில் நம்முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. இதர தேசங்களிலும் இதரசமயங்களிலும் காணக்கூடாத நீதியை அனுசரிக்காமலும், அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சர்வசாஸ்திரசம்மதமானமதம் "அசமஞ்சசம்" [Stupid] என்று நிராகரிக்கின்ற வேதபுஸ்தகத்தைத் தரிக்கத் தகுதியான இரண்டுகைகளினால் விவிலியத்தைத் தூக்குகின்றார்கள். ரேசனம், கும்பனம் முதலிய யோககாரியங்களுக்குத் தகுதியான தன்றேகத்தை மது மாமிசாதிகளினால் மயக்குகின்றார்கள். அன்னியமதப் பிரபந்தங்களினால் அறமானிக்கப்படாததாகிய பிரமாணப்பிரபந்தங்களை உபதேசிக்கத்தகுந்த தங்கள் நாவினால் அங்கிலேய பாஷையைப் பிள்ளைகளுக்கு கற்பிக்கும் இக்காலத்திய மஹாப்பிராமணர்கள் உத்திரங்கொடுக்கத்தகுதியானவர்களாகில், எல்லா சுவபாவகோணியும் சரிப்படுகின்றது. அசோகன் பௌத்தனாயினும், ஈசுவரனில்லையென்றுசொல்பவனாயினும் அவனால் தன்பிரஜைகளுக்கு உபதேசிக்கப்பட்டசில தர்மங்களும், ஆறுகள் குளங்கள் வெட்டுவதில் அவன் செய்த பிரயத்தனங்களும், பிரஜைகளை இரக்ஷிப்பதில் ஆசைகொண்டகல்ல அரசனென்று நன்றாய் வெளிப்படுத்துகின்றன. கணக்கற்ற சந்நியாசிகள் மடங்களையும், விதவிதமான மருந்துச்சாலைகளையும் அரசப்பொக்கிசத்தைச் செலவழித்து ஏற்படுத்தினான். தாய்தகப்பன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல், குழந்தைகளிடத்தில் அன்பு பாராட்டல், ஆடுமாடு பக்ஷிகளிடத்தில் அனுதாபப்படுதல் இவைபோன்றவிஷயங்கள் எல்லா ஜாதியார்களாலும் அவசியம் அனுசரிக்கப்படவேண்டிய தர்மங்கள். அப்படிச்செய்யாதவர்களுக்கு அவசியம் இராச தண்டனையுண்டு என்று தன்னாணையை வெளிப்படுத்தித் தானிருக்கும்பொழுதும் இறந்தபிற்பாடும் எங்கும் எல்லோர்கள் மனதில் ஊன்றும்பொருட்டு அநேக இடங்களில் சிலைகளில் எழுதிவைத்தான். இம்மாதிரியாய் எழுத்துகளடங்கிய ஸ்தம்பங்களும், சிறியர்ப

[illegible]

[illegible]

வதங்களும், விந்தியமலைச்சாறுகளிலும், காஸ்மீரத்திலும். தில்லிநகருக்குச் சமீபத்திலுள்ள தேசங்களிலும், துவாரகைக்கருகாமையிலுள்ளவிடங்களிலும், ஜயபுரத்திற்குப்போகும் இரஸதாவிலும், வெகுகாலமாகியும் நாசமடையாமலும், பஞ்சபூதங்களாலும் குறைவடையாமலும் காணப்படுகின்றன. ஒன்றுக்கொன்றுவெகுதூரத்திலிருக்கும் இவைகளே "அசோகனாணை இந்தியாமுழுமையும் பரவியிருந்ததென்று,, வெளிப்படுகின்றது. அவனுடையகாலத்தில் பாண்டியன், சோழன் இவர்களால் ஆளப்பட்ட தென்தேசங்களும் மகதராஜ்யத்திற்கு உட்பட்டதாயிருந்ததோ என்கிறவிஷயத்தில் நமக்குச் சந்தேகமுண்டாகின்றது,

இந்தியாவில் தானிருக்குமிடத்தில்மட்டும் பௌத்தமதத்தைப் பரப்பியதுபோதாது; அப்படியானால் தன்மரணத்துடனதுவும் மார்க்கமென்றெண்ணி சோழதேசம், பாண்டியநாடு, காஸ்மீர முதலிய இந்தியாவிலுள்ள பற்பல தேசங்களிலும், பாக்திரியா, சீனா, சீயம முதலியதேசங்களிலும், சிம்மளத்தீவிலும் பௌத்த மதத்தை ஸ்திரமாயுண்டாக்கும்பொருட்டு மதோபதேசாசிரியர்களை வெகுதனம் கொடுத்து மூலைமூலையாய் அனுப்பினான். மிகவும் நிபுணர்களான இவ்வாசிரியர்கள் அங்குசென்றபோதிலும், அவ்வவ்விடத்திய ஜனங்கள்வேறுமதத்தைக் கண்டறியாதவர்களானதாலும், பிராகிருதர்களானதாலும், உபதேசிக்கப்பட்டும் மதத்தினபெருமையையும் இழிவையையும் அறிய சக்தியில்லாதவர்களதலாலும் இவர்களுக்கு ஜயமேவதந்து இவ்விதந்தான் சிம்மளத்திலும், சீயம் சீனா பாக்திரியா ஐராவதி தீரம முதலியவிடங்களில் பௌத்தமதத்தின்விதைகள் விதைக்கப்பட்டன. ஆகையால்தான் மற்றைய மதங்களை அனுசரிக்கு ஜனத்தொகையைக்காட்டிலும் பெருகினதாகயிருக்கின்றது. பௌத்தர்களுடைய சனக்கொன்ற பூகோளசாஸ்திரிகளால் சொல்லப்பட்டுவருகின்றது. இம்மதமிவ்வளவாய்ப் பரவினதற்குக் காரணம் யாதெனின், அசோகன்காலத்திலும் அவனுக்குப்பின்வந்த மற்றைய அரசர்கள்காலத்திலும் ஏற்படுத்தப்பட்ட அநேகம் சபைகள், அவைகளில் செய்யப்பட்ட உபந்நியாசங்கள், பௌத்த மதாசிரியர்களால் தன்தேசம் அயல்தேசம் இவைகளில் செய்யப்பட்ட மதவிஷயமான உபதேசங்கள், அரசர்களால் கணக்கற்ற உதார குணத்துடன் நிர்மாணம் செய்யப்பட்ட விகாரங்கள், சந்நியாசிமடங்கள் ஒருதேசத்தவன் பூமியாலும் கடலாலும் வேறொரு தேசத்திற்கு யாத்திரைசெய்வது கொஞ்சமேனும் பாவமுண்டாக்கத்தக்கதல்லவென்கின்ற இவைகளும் இவைபோன்ற மற்றவைகளுமே வேறல்லவென்று புத்திமான்கள் அறிக. நம்மதத்தின் இம்மாதிரியான க்ஷீணதசையில் நம்மால் இக்காரியங்கள் செய்யப்படுவதால், இவைகளையே நாமும் செய்யவேணும்; ஆத்மசுகத்தைப் பாராட்டக்கூடாதென்று மடாதிபர்கள் எண்ணி அரசர்களும் அசோகன்போல் நடப்பார்களேயானால், நந்தேசம் மேலான நிலைமையை அடையாதோ? நம்மொற்றுமை அன்னிய மதத்தைச் சேர்ந்தவர்களைப் பயமுறுத்தாதோ? இப்பரதகண்டமுழுமைக்கு மிது க்ஷேமத்தைச் செய்யாதோ?

வரும்.

[illegible]

கலிகாலவ்ருத்தாந்த:

[illegible] (Gass-lights) [illegible] (Phaetons Execetra) [illegible] (Tram-cars) [illegible] (Judicatory)

இதற்கடுத்த 189-ம்பக்கத்தில் "அரககோணஞ் சைவசித்தாந்தியார்க்குப் பதிலுரைத்தல்,, என்னும் மகுடத்தின்கீழ் "மகாவிகடதூதன்,, 1888-ம் வருஷம் நவம்பர் மீ 17-ந்தேதி பத்திரிகையில் 7-ம்பக்கம்,, என்றதற் றொடக்கத்திற்குப் பிறகு இதைச் சேர்த்துக்கொள்ளுக.

சொப்பனம் அசத்தியமென்பாரை மறுத்து அறிவு உலகன்றென அகற்றல்.

ஐயா, "இந்துஜனபூஷணி" என்னும் பத்திரிகையில் "அத்வைதி,, என்றனைத்தொப்பமிட்டவோர் நண்பர் "அறிவோ உலகம்,, என்னும் ஓர் அரியவிஷயம் சிலமாசங்களுக்குமுன்பு எழுதியிருக்கிறார். அதற்கு இப்போது ப்ரம்மவித்தியா என்னும் பத்திரிகையில் பதில் வந்துகொண்டிருக்கின்றது. அதனையெழுதுபவர் அப்பத்திராதிபரோ. அவர் கூறுமெழுதுவதைமறைத்து யாரோ எழுதியனுப்புவதாக மனச் சாட்சிக்கு விரோதமாகப் பேசுகிறார்; ஆயினுமாகுக. அவரெழுதியிருக்கும் விஷயம் எப்படியிருக்கிறதெனயோசிக்கின், நாத்திகசித்தாந்தியாகிய அவருக்கே அது சந்தேகசனநயண்டுபண்ணுவதன்றி ஏனையோர்க்கு அருவருப்பையே யுண்டுபண்ணும். அத்வைதியாரது அபிமதத்தைக்கருவித்துப் பதில் சொல்பவர்போல அவர் நடித்து அவ்வத்வைதியார் சொல்லாதவிஷயங்களையெல்லாம் பிரஸ்தாபித்துக் குழறுபடைசெய்கிறார். எங்ஙனமெனில், "சாக்கிரவுலகத்தை அறிவு புறக்கருவிகளான இந்திரியங்கள் வாயிலாக அறிகின்றதெனவும், சொப்பனவுலகை இந்திரியங்கள்வாயிலாகவன்றி நேரே அறிகின்றதெனவுங் கூறுகின்றார்,, எனப் பிரஸ்தாபித்தார். இது சுத்தபொய். அத்வைதியாரோவெனின், "சொப்பனமென்பது அறிவு என்னும்பேருடைய ஆன்மா முப்பத்தைந்துகருவிகளைப்பெற்று நுதலின்கட் சாக்கிராவஸ்தையடைந்திருப்பதுபோல அந்த முப்பத்தைந்து கருவிகளில் பத்துக் கருவிகள்குறைந்து இருபத்தைந்து கருவிகளைப் பெற்றுக் கண்டத்தின் கட்டங்கியிருக்குமோரவத்தா நிலயமாம்,, என்று எழுதியிருக்கிறார். சாக்கிரம் முப்பத்தைந்து கருவிகளோடு ஆன்மா கூடிநிற்பதும், சொப்பனம் இருபத்தைந்து கருவிகளோடு ஆன்மாகூடிநிற்பதும் என்று அவர்விளக்கியிருப்பதற்கு மாறாக "சொப்பனவுலகை இந்திரியங்கள் வாயிலாகவன்றி நேரே [ஆன்மா] அறிகின்றது,, எனக்கூறினரென்று எழுதிவிடுத்தது மூடர்களை மயக்கவேயாம். கருவிகளோடு கூடாதபோது ஆன்மா சொப்பனவுலகத்தைக் காணாது எனவும், கருவிகளைக்கூடாமல் சொப்பனவுலகு ஆன்மாவினிடத்தி லுண்டாவதைக் காட்டமுடியுமோ எனவும் அத்வைதியார் ப்ரம்மவித்தியாவினதிபரைக் கேட்டிருக்கிறார். இதனால்அத்வைதியார்கருத்து சொப்பனவுலகை ஆன்மாவானது கருவிகளைக்கூடாதபோது அறியமாட்டாது என்று சித்தாந்தப்படுத்துவதாகவே முடிகின்றது. கருவிகளைக்கூடாது ஆன்மா சொப்பனவுலகைக் காணமுடியும் என்பது ப்ரம்மவித்தியாவினதிபர்மதம். அது நிசமெனக் காட்டவேண்டியே ஆன்மாவானது தேகசம்பந்தமின்றித் தனித்து நிர்மலமாகநின்று தன்னிடத்தில் சொப்பனம் பிரபஞ்சத்தைக்கண்டு மகிழ்ந்திடும் பார்ப்போம் என்று அவர் கேட்டிருக்கிறார். அதற்குப்பதில்சொல்லவகையறியாமல் வீணாகப் பக்கங்களை நிரப்பி "சொப்பனம் சத்தியமென்பாரை மறுத்து அறிவே உலகமென புனைந்தல்,, என்ற முழநீளமகுடம்புனைந்து அப்பத்திராதிபர் சந்தோஷித்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (The Viceroy and Governor General)
[illegible]
[illegible]
[illegible] (Floating-bridge)
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
(Steamers) [illegible]
[illegible]
[illegible]
[illegible] "[illegible]" [Ships] [illegible]
[illegible] [Jolly-boats] [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] [Simla] [illegible]
[illegible]
(29-II-88) [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] [Guns] [illegible]
[illegible]
[illegible]
[Thanks] [illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

உரு- [illegible]
உசு- [illegible]
உஎ- [illegible]
உஅ- [illegible]
உகூ- [illegible]
௩௰- [illegible]
௩௧- [illegible]

த்து அருவருக்கத்தக்கதேயாம். ஒருகேள்வி பிறக்கின், அதிற்குச் சுருக்கமாகவும், தெளிவாகவும் பதில் சொல்லவேண்டும். அவ்வாறு விடையளிக்க வல்லவர்க்கே கூடும் அதுசெய்யமாட்டாதபேர் வீண் கடையைப் பரப்பிக்கொண்டு படிப்பவர்தன் வெறுக்கதுவீசிவிடும்படி வெறுஞ் சொற்களைப் பதில் என்னும் பேரால் எழுதிவிடுப்பார்கள். பதில் எழுதினோம் பாருங்கோள் என்று சொல்லிக்கொண்டு தமது கௌரவத்தைக் காத்துக்கொள்ளுதலே அவரது மனோரதம். இவ்வாபாச நிலைமையைவிவேகிகள் மதியார்கள். இத்தகைய வாபாசங்களுக்கே யிருப்பிடமாகவெளிப்பட்டிருக்கும் அவரது பதிலைப்படித்துக் காலம்போக்குவது அவரினத்தவர்கட்கும் அருவருப்பையுண்டுபண்ணத் தவறாது. இவரது விபரீதஞானத்தை யாமேஅகற்றிடச்சித்தமாயிருக்கின்றோம். அதற்கு முந்தி ஈண்டுச்சில யாம் அவரைக்கேட்கின்றோம்.

1. அறிவினிடத்தில் சொற்பனவுலகைக் கற்பிக்கப்படும் எனின், தாங்கள் அவ்வறிவானது இருபத்தைந்து கருவிகளோடு கூடாமலும் தனித்து விளங்கியு நிற்பதுமாகியஅவசரத்தை நிரூபித்துஅதில்சொப்பனவுலகமுண்டாவதைக்காட்டும்பார்ப்போம்.

2. ஆன்மாவுக் குமூன்றவத்தையிலும் தேகமிருப்பதுசத்தியம், தேகம் என்பது தூல சூக்குமகாரணங்களாகப்பாசத்தினாற் காரியப்பட்ட ஓர்பொருள். இம்மூன்றவத்தைகளிலும் கருவிகளேறியும் குறைந்தும் நிற்கும். ஒருகவியோடும் ஆன்மாக்கூடாமனின்று, அவ்வான்மாவினிடத்தில் சொப்பனவுலகம் தோன்றுதலைக்காட்டுங்கள் பார்ப்போம்.

3. சத்து அசத்து என்னுஞ்சொற்களையே கேட்டறியாத கிறிஸ்தவர்களைத் தாங்கள் ஏமாற்றுவதுபோல், சைவர்களிடம் தங்கள் வித்தையைக்காட்டி மிரட்டமுடியாதாகையால், கிறிஸ்த்வசமயத்தினுக்கீழிட்ட சமயம் தங்களுடைய ஏகாத்மவாதமெனயாம்ஓதுக்கிப்பரிபவப்படுத்தாத அறிவேஉலகமென்பதைச் சாதித்துக்கொள்ளுங்கள் பார்ப்போம். சொற்சுருங்கியும் பொருள்விளங்கியுமுண்மைதோன்றவுரையுங்கள்.

(அரக்கோணம்- சைவசித்தாந்தி.)

பாலநீதி

[தொடர்பு]

உச. சபையின்சாரம் சாஸ்திரவிசாரம்.
உரு. சாடிச்சொற்குச் சற்றுமிடக்கொடேல்.
உஎ. சிறியனும்பெரியன் சிறப்புநடையுடையன்.
உஅ. சீரியர்சிநேகம் சிறப்பைக்கொடுக்கும்.
உகூ. சுருக்கியெழுதிப்பெருக்கிப்போதி.
௩௰. சூரனுவான் குரூரனுகான்.
௩௧- செய்கைநலத்தால் ஜன்மம்சிறந்ததாம்.

விளம்பரம்.

யாவர்க்கும் உபயோகம்!!

☞ ப்ரம்மவித்தியா தல
கஷியதிருதல் இரண்டு
டங்களையமிழுப்புள்ள
த்திரிகைகளை ஜீனத்திரும் ஒன்
றாகச் சேர்க்கப்பட்டு டபின்
செய்யப்பட்ட புத்தகங்கள்
150-இல் விலைபெறும் போக
பாகஙுள்ளனகாப்பிகள் காற்ப
தே; உள்ளகாபி பிகலெகாற்ப
மாதலின், ஏருவ ருடப்புத்த
கம 1-க்கு 2—8—0 ஆக இ
ன வருடப்புத்தகங்கள் 5
ருபாய்க்கு விற்கப்படும். தே
வையோர், போஸ்டேஜ் உ
ள்பட 5—6—0 மாகச் சேர்
த்துப்பிப் பெற்றுக்கொள்
ளலாம். போறுல் வராது.

அரக்கோணம் சைவ சித்தாந்தியார்க்குப் பதிலுரைத்தல்.

நாம் "அறிவே உலகம்" என்னும்விஷயத்தை இப்ப்ரம்மவித்தியாவில் முன்பொருக்காலெழுத; "அத்வைதி, அல்லதுசித்தாந்தி" என்னும் நாமம்பூண்ட பிரதிவாதியாரொருவர், அதை "இந்துஜனபூஷணி,, என்னும் பத்திரிகையின்கண் மறுத்தார். அதற்கு நாலுமுறையாகப் பதிலெழுதிமுடித்தோம். அதுகண்ட "அரக்கோணம் சைவசித்தாந்தி" என்னும்பெயர்பூண்டார், 1888ஷு நவம்பர்மீ 17-உ "மகாவிகடதூதன்,, என்னும் பத்திரிகையின்கண் ஷை விஷயமாகச் சிலவற்றைக் கூறியிகழ்கின்றார். அதை இதனடியில் அவர் வரைந்ததுபோல கூறி அதற்குச் சமாதானமு முரைப்பாம்:—

"மகாவிகடதூதன்,, 1888ஷு நவம்பர்மாசம் 17உ பத்திரிகையில் 7-ம்பக்கம்.

ஷை அரக்கோணம் சைவசித்தாந்தியார், தாம் வரைந்த விஷயத்திற்கு "சொப்பனம் அசத்தியமென்பாரை மறுத்து அறிவு உலகன்றென அகற்றல்,, எனத் தலைப்பெயரீந்தனர். 'சொப்பனம் அசத்தியமென்பாரை மறுத்து, என்னும் விஷயத்தை நமக்கவர் எழுதுவது அநாவசியகம்; ஏனெனின் சொப்பனம் அசத்திய மென்பாரை நாமு மறுக்கின்றோ மாகலினென்க. நாம் சொப்பனம் அசத்தியமென்பாரைமாத்திர மறுக்கவில்லை; சத்தியமென்பாரையுங் கூடவே மறுக்கின்றோம். எமது சித்தாந்தம் யாதெனின் சத்தியமுமன்று; அசத்தியமுமன்று; சத்தியாசத்தியமு மன்று. பின்னை, இம்மூன்றுக்கும் விலக்ஷணமாம்; அநிர்வசனீயமுமாம். இதன்பொருளை முன்னரே கூறியுள்ளோம்.

"இந்துஜனபூஷணி,, என்னும் பத்திரிகையின்கண் "அத்வைதி,, என்று கையொப்பமிட்டவோர் நண்பர் "அறிவோ உலகம்,, என்னும் ஓர் அரியவிஷயம் சில மாசங்களுக்கு முன் எழுதியிருக்கிறார். அதற்கு இப்போது ப்ரம்மவித்தியா என்னும் பத்திரிகையில் பதில்வந்துகொண்டிருக்கிறது,, என்றார். அதைப் பார்ப்பவர், அறிவோ உலகம் என்னும் விஷயம் "அத்வைதி,, என்பவர் முதலெழுதியதாகவும், அதற்குப்பதில் ப்ரம்மவித்தியாவில் பின்புவந்துகொண்டிருப்பதாகவும் அறிவரேயன்றி, முதலில் ப்ரம்மவித்தியாவில் 'அறிவே உலகம், என்னும்விஷயம் நாம் வரைந்ததாகவும், இரண்டாவது அதைமறுத்து 'இந்துஜனபூஷணி,யில் 'அத்வைதி, அல்லது சித்தாந்தி என்பவர் அறிவோ உலகம் என்னும்விஷயம் வரைந்ததாகவும், மூன்றாவது அதற்குப்பதில் "சொப்பனம் சத்தியமென்பதை மறுத்து, அறிவே உலகமெனவுரைத்தல்,,என்னும்விஷயத்தை ஷை ப்ரம்மவித்தியாவிலேயே நாம் வரைந்ததாகவும் கொள்ளார். ஷை இந்துஜனபூஷணியிலேயே ஷை அரக்கோணம் சைவசித்தாந்தியார் எழுதியிருப்பாராயின் இதுவிஷயத்தைப் பற்றி நாம் பேசவிடமின்று. 'மகாவிகடதூதன், பத்திரிகைக்கிவ்விஷயம் நூதனமாகலின் 'ப்ரம்மவித்தியா, இந்துஜனபூஷணி, இவ்விரண்டுபத்திரிகைகளையும் பாராதவர்க்கு முதல் முதல் எழுதியவிஷய மறியக்கூடாமல் இரண்டாவது விஷயத்தை (அறிவோ உலகம்?) முதலாகவும், மூன்றாவது விஷயத்தை (சொப்பனம்சத்தியமென்பதை மறுத்து, அறிவே உலகமெனவுரைத்தல்) இரண்டாவதாகவும் நம்பவேண்டிவரும். அவர் "அத்வைதி,, அல்லது "சித்தாந்தி,, என்பார்மாத்திரம் வரைந்தது "ஓர்அரியவிஷயம்,, என்றார். நாம்வரைந்த "அறிவேஉலகம்,, சொப்பனம் சத்தியமென்பதை மறுத்து அறிவேஉலகமென வுரைத்தல்,, என்னும் விஷயங்கள் மாத்திரம் எளியனவோ! இருபாலாரும் பேசியவிஷயங்களை யுக்தி அநுபவங்கட்குப் பொருத்தமாக வெடுத்துக்காட்டி, பிறகு "அரிது,, என்னும் மொழியைப் பிரயோகிக்கப்படாதா? அங்ஙனமின்றி ஒருசார்பாய் நமது பிரதிவாதியாருக்கு அநுகூலமாகவும், நமக்குப் பிரதிகூலமாகவும் கூற 'அரக்கோணம் சைவசித்தாந்தியார்க்கு யாம் யாதுதீங்குசெய்தோம்! அவரின்னாரெனவே யறியமாட்டாமே! அங்ஙனமாக அவர்க்குநாம் எப்படித தீங்குசெய்வது! நிற்க;

"அதனையெழுதுபவர் அப் பத்திராதிபரே. அவர் தாம் எழுதுவதை மறைத்து யாரோ எழுதியனுப்புவதாக மனச்சாட்சிக்கு விரோதமாகப் பேசுகிறார்,, என்றனர். நாம் எழுதிவரும் விஷயத்தை ப்ரம்மவித்தியா பத்திராதிபர்எழுதுவதாகச் சொல்வது என்னவிந்தை! நாம அப் பத்திரிகையின்கண் இவ்விஷயமாத்திரமன்று; அனேகவிஷயங்கள் எழுதிவந்தோம்; இனியும் எழுதுவோம். நாம் அப்பத்திரிகைக்குக் கையொப்பக்காரரும் நிருபநேசருமாம். அவ்வாறன்றி நாம் பத்திராசிரியருமன்று; பத்திராதிபருமன்று. அல்லாமல் அப்பத்திராதிபர் மகாபாண்டித்தியமுள்ளவர்; நாமோ சொற்பபடிப்புடையேம். அவர் உயர்குலத்தினர்; நாமோ தாழ்ந்தகுலத்தினேம். அவரிருக்கு மிடத்திற்கு நாமிருப்பது நெடுந்தூரம். அவர்க்கு நாம் எத்துணையும் இணையேயாகாதபோது நம்மையவராகவுரைத்தல் யாங்ஙன மமையும்? நாம் எழுதியனுப்பிய விஷயங்கட்கு இன்னும் நகல் வைத்திருக்கின்றோம். இப்படிக்செல்லாமிருக்க "அதனை யெழுதுபவர் அப்பத்திராதிபரே,, என எவ்வாறு துணிந்துகூறினரோ! இஃதுவியப்பினும் வியப்பே! இவ்வாறு மாறுபட வெழுதுவதனால் அரக்கோணம் சைவசித்தாந்தியாரவர்களுக்கு யாதுநயமோ அறிந்திலமென்க. "அவர் (ப்ரம்மவித்தியா பத்திராதிபர்) தாமெழுதுவதை மறைத்து யாரோ எழுதியனுப்புவதாக மனச்சாட்சிக்கு விரோதமாகப் பேசுகிறார்,, என்றார். அது சுத்த பொய்; அவர் மறைக்கவுமில்லை; யாரோ எழுதியனுப்புவதாக மனச்சாட்சிக்கு விரோதமாகப் பேசவுமில்லை. நாமே நமது பேரை மறைத்தோம். இஃது மனோசாட்சிக்கு விரோதமுமன்று. தமக்குபேர் "குமரன்,, என்றிருக்க "முருகன்,, என்று பிறிதொருவன் பெயரைவைத்தெழுதி, அதுதான் எமதுபேரென்றுகூறினால் அதை மறைத்ததாகவும் மனச்சாட்சிக்கு விரோதமாய்ப் பேசுவதாகவும் கூறலாம். அப்படிக்கு யாதுமில்லையே. பத்திரிகைகளில் தங்கள்பேரைமறைத்து, எழுதும் விஷயங்கட்குத்தக்கவாறேனும், அன்றி வேறெந்தப் பெயரையேனும் வைத்தெழுதுவது தமிழ்ப்பத்திரிகைகளுக்குமாத்திரமன்று; எப்பாஷைப் பத்திரிகைகட்கும் வழக்கந்தான். அல்லாமல் அன்னியதேசத்தாருமிம்மாதிரியேதான் செய்துவருகின்றார்கள். அதற்கு வேறுசாக்ஷியம் வேண்டுவதில்லை; நமது முதற்பிரதிவாதியார் "அத்வைதி,,அல்லது "சித்தாந்தி,, யாரும் இரண்டாவது

பிரதிவாதியார் "அரக்கோணம் சைவசித்தாந்தி,,யாரும் தங்கள்பேரை மறைத்தமையே போதியசான்றும். குற்றமில்லாததும், அநாவசியகமானதுமான இவ்வாருன விஷயங்களெல்லாம இனி வரைவதைவிடுத்து, எடுத்தவிஷயங்களைமாத்திரம் பேசுவாரென அவர்க்கு அநேகவந்தனம்புரிந்து கேட்டுக்கொள்ளுகின்றோம். ப்ரம்மவித்தியாபத்திராதிபராவது தமது பேரை மறைத்தாரெனினும் அஃதும் மனோசாட்சிசகு விரோதமாகாது. பத்திராதிபரும் பத்திரிகாசிரியரும் அங்ஙனம் புரிவதும் வழக்கந்தான். சிற்சில சந்தர்ப்பங்களில் அவ்வாறவர்கள் எழுதுகின்றார்களென்பதை நாம் ருசுவும்படுத்துகின்றோம? அப்படி எழுதுவதும் பரோபகாரத்தைக் கருதியேதான். ஆதலால் ப்ரமவித்தியா பத்திராதிபரவர்களே! "ஓர் நண்பன்,, என்று கையெழுத்து வைத்திருந்தாலும் அஃது ஓர்போதும மனோசாக்ஷிக்கு மாறாகாதென்றறிக. பத்திராதிபராவது, பத்திராசிரியராவது, நிருபநேசராவது தமதுசொந்தப் பேரை மறைத்து வேறுபெயரை வைத்து எழுதினார்களென்பதை நாம் அறிந்திருந்தாலும், அதை வெளிக்குக்காட்டலாகாது. அப்படிக்காட்டுவது நியாயமுமன்று; தருமமுமன்று. தமதுபேரை மறைப்பதற்கு நியாயமான காரணங்கள் எத்தனையோ விருக்கலாம். விஷயகாட்டமுள்ளவர்களுக் கிஃது தெரிவசியகமுமாம். "அத்வைதி,, அல்லது "சிததாந்தி,, என்னும் இருநாமமும் பூண்ட பிரதிவாதியார், தமது உண்மைப்பெயரைப் பிறிதொரு பத்திரிகையின்வாயிலாகஅவரறிவித்திருந்தும் நாம் அப்பெயரை எடுத்துதகரிக்கின்றோமா? அந்தக்கனவான் வெளியாகக் காட்டிய பெயரையே நாம் வெளிக்குக் காட்டாமல் அவ்வளவு மரியாதையாயிருக்க,அரக்கோணம்சைவசித்தாந்தியார் எமதுமறைவுபட்டபெயரைக்கொண்டுபோய்ப் பகிரங்கமாகப் பிறிதொருவர்மேலேற்றுவது எப்படி நியாயமாகும்? ஒருபேரிருக்கப் பிறிதொருபேரைப் பகிரங்கமாகக் கூறுமிவர், நாமின்னாரெனத்தெரியின் நமது உண்மைப் பெயரையும் பத்திரிகையி லெழுதப் பின்னிடுவரோ! நிற்க; உள்ளபேரை மறைப்பதற்கு நியாயமானகாரணங் களிருக்கின்றமையால் அது ஓர்போதுங்குற்றமாக மாட்டாது. ஓரோர்பர் பற்பலநாமந்தரித்து பத்திரிகைகளில் வரைவதுண்டு. அது நாமறிந்தாலும் வெளியிடுதல் கூடாது. "அவரெழுதியிருக்கும் விடயம் எப்படியிருக்கிறதெனயோசிக்கின், நாத்திகஸித்தாந்தியாகிய அவருக்கே அது சந்தோஷத்தை உண்டுபண்ணுமன்றி ஏனையோர்க்கு அருவருப்பையேஉண்டுபண்ணும்,, என்றார். நாம் வரைந்த விஷயத்தைப்பற்றிப் பேசவந்தவிவர், அதுகடந்து நாத்திகசித்தாந்தியென்று கூறுவதென்ன நியாயம்? நாத்திகமத மின்னதென்றும், அம்மதத்தைக்கொண்டவரின்னாரென்றும் பேசநாம்இப்போதுவரவில்லை. நமக்கும், அத்வைதி அல்லது சித்தாந்தியார்க்கும் நாஸ்திகஆஸ்திகவாதங்களைப்பற்றி யாதொன்றும நிகழவில்லை. அப்படியிருக்க அதவிஷயத்தைப்பற்றிப் பேசுதல் நியாயமாமா? இடையிடையிலெவ்வொன்று தோன்றுமாயின் அதற்குச் சமாதானமுரைக்கவேண்டி வருகின்றது. ஆயினும் இதற்குப்பதில் அப்படியல்லவென்றும் ஆஸ்திக சித்தாந்தியென்றுங் கூறுகின்றோம். அதுவிஷயம் நேரிடுங்கால் எழுதச் சித்தமாயிருக்கின்றோம். "அவருக்கே அது சந்தோஷத்தையுண்டுபண்ணுமன்றி ஏனையோர்க்கு அருவருப்பையே யுண்டுபண்ணும்,, என்பதற்குச் சமாதானம். அது நமக்குமாத்திரஞ் சந்தோஷத்தையுண்டுபண்ணுமென்றும், ஏனையோர்க்குஅருவருப்பையேயுண்டுபண்ணுமென்றும் இவர்க்கு எப்படித்தெரியும்? "அத்வைதி,, அல்லது "சித்தாந்தி,, யார் எழுதிய விஷயம் அவர்க்குமாத்திரஞ் சந்துஷ்டியை யுண்டுபண்ணுமென்றும், ஏனையோர்க்கு அருவருப்பையே யுண்டுபண்ணுமென்றும் நாமாவது பிறராவது அவர் எழுதியதுபோலவே நேரேதுவாய்த் திருப்பி எழுதிவிட்டால் இருவர்சொல்லும் சமப்பட்டுப்போமே. சமப்பட்டுப் போமானால் நம்மைக் குறைகூறவந்த அரக்கோணம் சைவசித்தாந்தியார்க்கு மனம் அதிர்ப்தியுண்டாமே. நமது குறைவுக்காக நாம் விசனப்படவில்லை; அவர் அதிர்ப்திக்காகவேவிசனப்படுகின்றோம். நிற்க, நியாயமானவிஷயம் ஒன்றை எத்தனைபேர் நியாயமன்று என்று கூறினும் அது நியாயம் நியாயமே; நியாயமில்லாத ஒன்றை எத்தனைபேர் நியாயமென்றுரைக்கினும் அது அநியாயம் அநியாயமே. இதனைப் பொதுவாக யாவருமே அங்கீகரிப்பர். இனி நியாயம் யாது? நியாயமற்றதுயாது? என விசாரித்தல்வேண்டும். அத்வைதி, அல்லது சித்தாந்தியாரான பிரதிவாதியார் இன்னும் பதில்வரைந்தாரில்லை. நாமாவது நமது பிரதிவாதியாரான கனவானுவது எவரையும் மத்தியஸ்தமழைத்தோமில்லை. அரக்கோணம் சைவசித்தாந்தியார் பேசப்புறப்பட்டார். புறப்படட்டும்; அதுஎமக்குச் சந்தோஷமே. ஆனால் நடுநிலையாய்நின்று' இன்னபக்கம் இன்னவிஷயம்குற்றம், இன்னபக்கம இன்னவிஷயம் குணம், என்று சுருதியுக்தி அநுபவங்களுக்கொத்துப் பேசாமல் பிரதிவாதியார் சார்பாகநின்று, அவர்பேரில் முற்றுங் குணத்தைவைத்து, நாம் வரைந்தவிஷயம் யாவும் குற்றமாகவே காட்டித்தாம் திருப்தியடைகின்றவரையில் தூஷித்துவிட்டார். வாதிப்பிரதிவாதிகளான இருவர் கக்ஷிக்குட்புகுந்து பிறரெழுதப்புகின் நியாயஸ்தலத்தில் நியாயாதிபதிகள் இருவர் கக்ஷியையும் எடுத்துக் குற்றமின்னோர்பாலுளது, குணமின்னோர்பாலுளது என்று சட்டத்தை ஆதாரமாகக்கொண்டு நியாயத்தீர்ப்பு எழுதுவதுபோல் எழுதவேண்டும். அங்ஙனம் செய்தாரில்லை. நிற்க, நாம் எழுதியவிஷயம் நமக்குமாத்திரஞ் சந்தோஷத்தை யுண்டுபண்ணு மென்றும், ஏனையோர்க்கு அருவருப்பையே உண்டுபண்ணு மென்றும் வாளா எழுதிவிட்டாலெப்படி அங்கீகரிப்பது? எல்லோருடைய உள்ளத்தையு மிவர்கண்டனரா? நாம் தவிர மற்றயாவரும் அருவருத்ததாகவே வைத்துக்கொள்வோம். அவ்வருவருப்பு அபிமானங்காரணமாகத்தோன்றியதா? நியாயங் காரணமாக வுண்டாயிற்று? அபிமானங் காரணமாகவெனின் அதுகொள்ளற்பாற்றன்று; நியாயங் காரணமாகவெனின் அந்த நியாயம் யாது? அதை இன்னதென வெளிப்படுத்தியன்ரு எமது சந்தோஷத்தையும், ஏனையோர் அருவருப்பையுங கூறவேண்டும்? ,அவர் எழுதியிருக்கும் விஷயம் எப்படியிருக்கின்றதென யோசிக்கின், என்பதைப்பற்றிச் சிறிது பேசுவாம். இவர் யோசனை இவர்க்கேயன்றி ஏனையோர்க்கன்று. இவர் யோசனை சரியாயிருந்தாலுமிருக்கும்; தப்பாயிருந்தாலுமிருக்கும். இன்று இவர்க்குச் சரியென்றுபட்டது, நாளை இவர்க்கேதப்பென்றுதோன்றும். இவர்கு என்றும் ஒருதன்மையாய்த் தோன்றுமென்றே வைத்துக்கொள்வோம். இவர் யோசனையே பிறர்க்கும் யோசனையென்று எங்ஙனங் கருதக்கூடும்? அன்றி விடயத்தினுண்மை மனத்திற்படாவிடில் யாரும் தம்மனத்திற்றோன்றியபடியேதான் யோசிப்பர். ஆகலின் அரக்கோணம் சைவசித்தாந்தியார், தமதுயோசனையைக்கொண்டு பிறர்க்கும் அவ்வாறெனக்

கூறுவதும், அதுகாரணமாக நம்மேல் குறைகூறுவதுமபிப்பாயமன்றென வணக்கத்துடன் விஞ்ஞாபனஞ்செய்து கேட்டுக்கொள்ளுகின்றோம். இனி ஏனைய விடயங்களைப் பரியாலோசிப்பாம். அத்வைதி, அல்லது சித்தாந்தியார் சொல்லாத விடயங்களையெல்லாம் பிரஸ்தாபித்துக் குழறுபடை செய்கின்றதாகச் சொல்லுகின்றார். அது இது: "சாக்கிரவுலகத்தை அறிவு புறக்கருவிகளான இந்திரியங்கள் வாயிலாக அறிகின்றதெனவும், சொப்பனவுலகை இந்திரியங்கள் வாயிலாகவன்றி நேரே அறிகின்றதெனவுங் கூறுகின்றார்,, எனப் பிரஸ்தாபித்தார். இதுசுத்த பொய். அத்வைதி (அல்லது சித்தாந்தி) யாரோவெனின் 'சொப்பனமென்பது அறிவு என்னும் பேருடைய ஆன்மா முப்பத்தைந்து கருவிகளைப் பெற்று நுதலின்கட் சாக்கிராவஸ்தையிலடைந்திருப்பதுபோல அந்த முப்பத்தைந்து கருவிகளில் பத்துக்கருவிகள் குறைந்து இருபத்தைந்து கருவிகளைப்பெற்றுக் கண்டத்தின்கட் டங்கியிருக்குமோர் ஸ்தான நிலையமாம், என்று எழுதியிருக்கிறார்,, என்பதாம். இதில சொப்பனமென்பது முதல் நிலயமாம், வரையில் அத்வைதி அல்லது சித்தாந்தியார் எழுதியது. அவர் "இந்துஜனபூஷணி,, யில எழுதியதாக நாம் ப்ரம்மவித்தியாவில் வரைந்தது: "சாக்கிரவுலகத்தை அறிவு, புறக்கருவிகளான இந்திரியங்கள் வாயிலாக அறிகின்றதெனவும், சொப்பனவுலகை இந்திரியங்கள்வாயிலாகவன்றி நேரேஅறிகின்றதெனவுங் கூறுகின்றார்,, என்பதே. இன்னும் நாம் ப்ரம்மவித்தியாவில் அதற்கு அடுத்து முன்னெழுதியது: "சாக்கிரவுலகம் எவ்வாறு சத்தியமோ, அவ்வாறே சொப்பனவுலகமும் சத்தியமெனப் பிரதிவாதியார் அபிப்பிராயப்படுகின்றார்,, என்பதாம். நாம்சொப்பனவுலகை இந்திரியங்கள் வாயிலாகவன்றி நேரே அறிவு அறிகின்றதெனக் கூறினேம். அறிவு அறிகின்றதென்று அதன்பொருளிருக்க அரக்கோணம் சைவசித்தாந்தியார் சொப்பனவுலகை இந்திரியங்கள் வாயிலாகவன்றி நேரே [ஆன்மா] அறிகின்றது எனநாம் கூறியதாக வுரைத்தார், [ஆன்மா] என்பதை ப்ராக்கட்டில் சொல்லியிருப்பதால் அது அவர்கொள்கையேயன்றி எமதுசம்மதமன்று. ஆன்மாவானது நேரே யறியாதென்பது எமக்குஞ் சம்மதந்தான். அவருரைப்பதுபோல சாக்கிரவுலகை 35-கருவிகளைக் கொண்டுதான் அறியவேண்டுமென்றி 10. கருவிகள் நீக்க மற்ற 25. கருவிகளைக்கொண்டு அறியமுடியாது. எது இந்திரியங்களை நீக்கி மற்ற 25. கருவிகளைக்கொண்டு அறியப்படுமோ அது அசத்தேயாகும். அறிவு நேரே அறிகின்றதென்றுயாமுரைத்தது ஆன்மா தனித்தன்று. ஆன்மா தனித்து அறியாதென்பதெமக்குமுடம்பாடேயாம். இந்திரியங்கள் வாயிலாகவன்றி அறிவு நேரேயென்று நாமுரைத்தமையால் இந்திரியங்களின்றி மற்றக்கருவிகளுடனென்பதுபொருள். அரக்கோணம் சைவசித்தாந்தியார் "[ஆன்மா] அறிகின்றது,, என்று நாமுரைக்கவில்லையென மற்றொருமுறை ப்ரம்மவித்தியாவில்பார்த்து, எமதுபேரில் ஆரோபித்த குற்றத்தை நிவர்த்திக்க மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகிறோம். நாம் "அறிவு அறிபடுபொருள்,, என இருபகுதியாக்கிக் கூறினமையின் அவர் கூறிய 25. கருவிகளை ஆன்மாவோடு சேர்த்து அறிவு என்றோம்.

"அத்வைதி [அல்லது சித்தாந்தி]யாரது கருத்து சொப்பனவுலகை ஆன்மாவானது கருவிகளைக் கூடாதபோது அறியமாட்டாதென்று சித்தாந்தப்படுவதாகவே முடிகின்றது,, என்றார். நாமெழுதிய விடயத்தை யவர் மறுத்தது பற்றி அதற்குச்சமாதானங்கூற வந்தாரன்றி அவர் கொள்கையை நாம் ஆக்ஷேபிக்கவந்தோமில்லை; அன்றியும், அவர் ஜோலிக்கும் நாம் வந்தோமில்லை. அவரதுகொள்கையை நமக்கு இச்சமயம் சொல்வது அனுவசியகமுமாகும். சொப்பனவுலகை ஆன்மாவானது கருவிகளைக் கூடாதபோது அறியமாட்டாது என்பதில் நாம் கூறுவதாவது: இந்திரியங்கள்வாயிலாகவன்றி மற்றக்குறைந்த கருவிகளுடன் அறியப்படும் உலகம் ஒருபோதுஞ்சத்தாகாது; அசத்தாகுமென்பதேயாம். "கருவிகளைக் கூடாது ஆன்மா சொப்பனவுலகைக்காண முடியும் என்பது ப்ரம்மவித்தியாவின் நிர்மதம்,, என்றார் நாமேவாதியானமையின் நாமே இதற்கு மறுமொழியுரைக்கின்றோம். ஆன்மா கருவிகளைக்கூடாதம்போது சொப்பனவுலகைக்காண முடியுமென்று நாமுரைக்கவுமில்லை; அது நமது அபிப்பிராயமுமன்று. அறிவு என்பதற்கு[ஆன்மா]என்றுகூட எழுதிக்கொண்டு, அதை நாமுரைத்ததாகக்கூறிவிட்டு, குழறுபடைசெய்வதாகவும் நம்மீது குறைகூறினார். நாம பதில்சொல்ல வகையறியாமல் வீணுப் பக்கங்களை நிரப்பினதாகவும் பேசுகிறார். நாமெதற்குப் பதில்சொல்லவில்லை? அவரது ஆக்ஷேபங்களுக்கெல்லாஞ் சமாதானஞ் சொல்லியிருக்கின்றோம். வீணுக்குப் பக்கங்களை நிரப்பினதாகச் சொல்லுகின்றார். வீணுக்கு ஒருஎழுத்துமில்லையே. பக்கங்கள் நிரப்ப அவசியமானல் நிரப்பவேண்டாமோ! ஆக்ஷேபங்களுக்குத் தக்கசமாதானஞ்சொல்வதற்கு எவ்வளவு எழுதவேண்டுமோ அவ்வளவுமெழுதாவிடில்எப்படி சமாதானமாகும்? ஏதேனும் அநாவசியகமான விடயம் எழுதியிருந்தால் அதைச்சொல்லி, பக்கங்கள்நிரப்பின குற்றஞ்சுமத்தலாம்? அப்படி ஒன்றுமில்லையே. இவ்விடயத்தில் எமதுபேரில்மாத்திரங் குற்றஞ் சுமத்தினரேயன்றி அத்வைதி அல்லது சைவசித்தாந்தியார்பேரில் சொல்லவில்லையே. நாம் ஒருபத்திரிகையில் "அறிவே உலகம்,, எனச் சுருக்கமாயெழுதினல் அவர் நாலுபத்திரிகையில் நீளநீளமாக மொத்தத்தில் நமக்குமேல் ஆறுமடங்கு சாஸ்தியாயெழுதினரே. அவர் மாத்திரம் இவருக்கு என்ன உறவினர் யாம் என்ன பகைவரா? நிற்க, மேல்பார்ப்போம். 'சொப்பனஞ்சத்தியமென்பாரைமறுத்து அறிவே உலகமெனவுரைத்தல் என்றமுழநீளம் மகுடம்புனைந்து அப்பத்திராதிபர் சந்தோஷித்தது அருவருக்கத்தக்கதேயாம்,, என்றார். எந்தெந்த விடயத்திற்கு எவ்வெவ்வளவு மகுடங் கொடுக்கவேண்டுமோ, அவ்வவ்வளவு தரவாண்டாமா? இவ்வாறு யாருங்கொடுத்ததில்லையா! எத்தனையோபத்திரிகைகளில் இதைவிட நீளமாகக் கொடுத்திருக்கின்றார்களே. திருஷ்டாந்தமாக அடுத்த 1888-ஹு நவம்பர்மீ 28உ புதவாரப்பத்திரிகை 374-ம்பக்கத்தில் சுதேச அரசரின் சைன்னியமும், இந்தியாவின் அரணும்,, என்னும் மகுடமும், 375-ம் பக்கத்தில் "எதுசிறந்தது? சர்க்கார்உத்தியோகமா? அல்லது கிருஷித்தொழிலா?,, என்னுமகுடமும் எவ்வளவுநீளமென பார்ப்பாராக. அவசியமானல் இதைவிட நீளமாகவும் மகுடந் தரிப்பித்திருக்கின்றார்களே. இவர்களெல்லாஞ்சந்தோஷித்தார்களா? மகுடம் நீளமாய்த் தரிப்பவர்களெல்லாஞ் சந்தோஷிப்பதுவழக்கமா? இன்னதற்குச் சந்தோஷிப்பது, இன்னதற்கு விசனப்படுவது என்றில்லையா! 'அப்படிச் சந்தோஷிப்பதுஅருவருக்கத்தக்கதேயாம், என்றுசொன்னது இன்னும் நன்றாயிருக்கின்றது! அவரே சந்தோஷித்தாரென்றுரைப்பதும் அவரே அருவருக்கத்தக்கதென்று கூறுவதும் என்ன நியாயமோ அறியேம். அவரே ஷெ இரண்டுக்கும் குற்றமுரைக்கின்றாரேயன்றி மற்றப்படிக் குற்றமொன்றையுங் காணேமே. உலகில் யார் நீள

மாய் மகுடந்தரிசிக்கின்றார்களோ, அவர்களெல்லாம் சந்தோஷிக்கின்றார்கள், அவர்கள் அருவருக்கத்தக்கவர்கள் என்று கூறுவது நியாயந்தானே? இது மெய்யாயானால் எல்லாப் பத்திராசிரியரும், கடிதக்காரரும், கிரந்தகர்த்தர்களும் இந்தக் குற்றத் திற்கிலக்காகாமற்போகார்களே. உலகில் யாவர்பேரிலுங் குற்றங் கூறிய நமது அரக்கோணம் சைவசித்தாந்தியார் மாத்திரந் தப்பித்துக்கொண்டாரென்று சந்தோஷித்த தமது சந்தோஷத்தையும் தாம் கெடுத்துக்கொண்டாரே என்று மாத்திரம் விசனப்படுகின்றோம். நாம் அவரால் அருவருக்கத்தக்க நீண்டமகுடம் எப்படிப்புனைந்தோமோ, அவரும் அவ்வளவே சிறிதுங் குறைச்சலின்றிப் புனைந்தமையாலென்க. நாம் பொருத்திய மகுடம் "சொப்பனம் சத்தியமென்பதை மறுத்து அறிவே உலகமெனவுரைத்தல்,, ஆம். அவர் "சொப்பனம் அசத்தியமென்பாரை மறுத்து அறிவு உலகமன்றெனவகற்றல்,, ஆம். இவ்விரண்டு மகுடங்களில் நீளமெது? குட்டையெது? பாருங்கள்! தனித் தனியே எழுத்தை எண்ணிக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர் மகுடமும் எமது மகுடமும் முப்பத்தெட்டு எழுத்துகளேயிருக்கின்றன. நாமும் ஏனையபத்திராசிரியரும் கிரந்தகர்த்தரும் எப்படி அவரால் அருவருக்கப்பட்டோமோ, அப்படியே அரக்கோணம் சைவ சித்தாந்தியாரும் அவராலேயே அவர் அருவருக்கப்பட்டார். எல்லோரையுங் குறைகூறிய அவராவது குற்றமற்றவராயில்லாமற்போனதுபற்றி அவரேமனவருத்தப்படுவாரென்றெண்ணுகின்றோம். இதற்குமேல் ஏதேதோ அவரிஷ்டம்போல சிலவற்றைப் பேசுகின்றார். அதன் விடயம் அதைப் படிப்பவர்கள் பார்த்துக் கொள்வார்களாக. "பிறது இவரது விபரீத ஞானத்தையாமே அகற்றிடச் சித்தமாயிருக்கின்றோம்,, என்றார். நமது ஞானம் விபரீதமெனச் சுருதியுக்தி அநுபவங்களுடன் காட்டுவாராயின் அவ்விபரீதத்தையகற்றிக்கொள்ளச் சித்தமாயிருக்கின்றோம்; அன்றி அவருக்கு அநேகவந்தனமுஞ் செய்கின்றோம்; அல்லாமல் "நன்றி மறவேல்,, என்னும் ஔவைவாக்கின்படியே அவர் புரிந்தநன்றியையொருக்காலும் மறக்கமாட்டோம்.

அதற்குமேல் "அதற்குமுந்தி ஈண்டுச் சிலயாம் அவரைக் கேட்கிறோம்,, என்றுதொடங்கிச் சிலவற்றைச் சேட்டுச் சாமர்த்தியம் பேசுகின்றார். அப்படிப்பட்ட சாமர்த்தியம் பேசஎம்மாலாகாது. நாம் அவரோடுசண்டைசெய்பவரல்லேம். எமக்குத்தோன்றிய விடயத்தை எழுதினோம். அதை அத்வைதி அல்லது சித்தாந்தியார் மறுத்தார். அதற்கு எம்மால் கூடியவரையில சமாதானமுரைத்தோம். அதற்கு அவர் சொல்லாதவிடயத்தையும் நாம் வரைந்ததாக இவர் கூறினர். அப்படி நாமுரைக்கவில்லையென்றுரைத்தோம் அன்றி நாம் உரையாத விடயம் ஒன்றை நாம்கூறியதாக உரைத்தார். அப்படி நாமுரைக்கவில்லையென்று அவ்விடயத்தையு மெடுத்துக்காட்டிக்குற்றத்தையும் நிவர்த்திசெய்தோம். இவர் ஏதேதோ நமக்கிஷ்டமானபடி வைதார். அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு அதற்குத்தாழ்மையாகவே பதிலுஞ்சொன்னோம். அவர்கூறிய குற்றத்திற்கு நாம் சமாதானமுரைத்துவிட்டமையால் அவர் எம்மையாதும் வினவவேண்டிய அவசியமின்று. இதற்கு யாம் சமாதானம் உரைத்தாலும் அதற்குமேலும் கேட்பார். இது அனவஸ்தா தோஷமாக முடியும். அவர்கேட்ட மூன்றுகேள்வியில் 3-வது விடயம் நாம் செய்யும் வாதசம்பந்தமல்லாமையால் அதற்கு மாத்திரம் பதில்சொல்லுகின்றோம். "சத்து அசத்து என்னுஞ்சொற்களையே கேட்டறியாத கிறிஸ்தவர்களைத் தாங்கள் ஏமாற்றுவதுபோல,, என்றார். இது "சென்னை வேதாந்தவிசாரணை சபையார்,, "கிறிஸ்தவர்களைக் கேட்கும் வினக்கள்,, என்னும் சிறுபத்திரம் வெளியிட்டதைப்பற்றிச் சொல்லுகின்றதுபோல் காணகின்றது. அது அவர்களைக் கேட்கவேண்டிய விடயம். அச்சபையார் பகிரங்கமாகத் தங்கள்பேரை வெளிட்டு, பதில் எழுதுபவர்களுக்கு மேல்விலாசமும் கொடுத்திருக்கின்றார்களே; அப்படியிருக்க "ஓர் நண்பர்,, என்னுங்கையொப்பக்காரரை ஏன் கேட்கவேண்டும்? இவர் இலவுகீகமே தெரியாதவராயிருக்கின்றார். எங்கெங்கேயோ போய்ப்பாய்கிறார். நாமேதேனும் அளவுகடந்துபேசுகின்றோமா? அவர் அளவுகடந்து பேசுகிறவிஷயத்தில் அதற்கெல்லாஞ் சமாதானஞ்சொல்லவேண்டி வருகின்றது. யாதுசெய்வது? ஆயினும் மேற்படி விஷயத்தைச்சிறிது ஆலோசிப்பாம். "சத்து அசத்து என்னும் சொற்களையே கேட்டறியாத கிறிஸ்தவர்கள்,, என்பதுகூடாது. சத்து என்பதின்பொருள் உள்ளது; அசத்து என்பதின்பொருள் இல்லது. உள்ளது இல்லது என்னும்சொற்களையே கேட்டறியமாட்டார்களென்று நாமெப்படிச்சொல்லலாம்? ஏமாற்றுவதாக வுரைக்கின்றார். அச்சபையார் ஏமாற்றவில்லை. கிறிஸ்தவர்கள், தங்கள் மதந்தான் மேலென்றுரைக்கின்றமையால் அவர்களைக் கேட்கத்துணிந்தார்கள். அது நியாயமாகவும் வெளிப்படையாகவுமிருக்கின்றமையால் ஏமாற்றினதாகச்சொல்வதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. ஒருமதஸ்தர் பிறிதொரு மதஸ்தரைக் கேட்குங்கேள்விகளில் அம்மதஸ்தர் சொல்லத்தக்க கேள்வியாகவுமிருக்கலாம்; சொல்லத்தகாத கேள்வியாகவுமிருக்கலாம். சொல்லத்தகாத கேள்வியாயின் அது ஏமாற்றுவதாகக் கூறலாமோ? அச்சிறுபத்திரிகையில் கூறிய முகவுரையைப்பார்த்தோமானால் கேள்விகேட்பதற்குத் தக்கநியாயமும் காணலாம். "சைவர்களிடம் தங்கள் வித்தையைக்காட்டி மிரட்ட முடியாதாகையால்,, என்றார். நாம் ஏதேனுமொருவிஷயம் நமக்குத்தெரிந்ததையெழுத, அத்வைதி அல்லது சித்தாந்தியார் வலியவந்துவிழுந்து மறுத்ததனோடு நம்மை ஆங்காங்கு வைததைக்கவனியாமல் நாம்சைவர்களை மருட்டினதாகக் கூறினரே; இது என்ன அநியாயம்! நாம் எழுதினதில் நாஸ்திக மதமன்றி மற்றெந்தமதத்தையாவது குறித்தோமா? அம்மதசித்தாந்தங்களில் எதையேனுந்தொட்டோமா? அதைப்பற்றிப் பேசினோமா? தூஷித்தோமா? ஒன்றுமில்லையே; அங்ஙனமாகச் சைவர்களை மருட்டினதாக யாங்ஙனங்கூறவிசைந்தனர்? இவர், சைவர்களை மருட்டினோர்களென்னில் பிறிதொருவர் வைஷ்ணவர், மற்றொருவர் நையாயிகர், இன்னொருவர் வைசேஷிகர், இன்னொருவர் சாங்கியர், இன்னொருவர் யோகர் இப்படியே ஒவ்வொருவரும் சொல்வார்களன்றோ? அப்படியே யெமது கொள்கைக் கிசையாத கொள்கையுடையோர்களையெல்லாம் மருட்டினதாகச் சொல்லவேண்டுமே. அங்ஙனங்கூறாமல் சைவர்களைமாத்திர மருட்டினதாகச் சொல்வதெனனோ! எல்லோரையுமருட்டினதாக இனிச்சொல்வாரேல் அதுவும்பொருந்தாது; இவர்கொள்கை ஏனையோர்க்கு விரோதப்படுவதால், இவர் யாதுகூறினும் ஏனையோரை மருட்டினதாகவே முடிகின்றமையாலென்க. உலகில் பலமதங்களுள்ளன; அதிலும் ஒரேபிரமாணங்களைக் கொண்டவர்க்குள்ளும் அனேகபேதங்களிருக்கின்றன; ஒருவகையார் சொல்வது ஏனையோர்க்கு விரோதந்தான். ஒவ்வொருவரும் தத்

தம் கொள்கைகளைச்சொல்வது, இவர் கூற்றின்படி ஏனையோரைமருட்டினதாகவே முடிகின்றது. அப்படிப்பட்ட குற்றம் நமக்குள்ளதுபோல் இவர்க்கும் மற்றெல்லோர்க்கும் சகஜமாயிருக்கின்றது. அங்ஙனமாக நம்மைமாத்திரம் அக்குற்றத்திற் கேட்படுத்தி யிவர் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பதென்னே! நிற்க, இவர் சைவர்களை மருட்டுவதாக நம்மைநோக்கிச்சொல்வதால் நாம் சைவரல்லவென்று அவர் கருதினர்போலும்! அங்ஙனமன்று; நாம் சைவரேயாம். ஆனால் சைவத்தில் பலபிரிவுகளிருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொருகொள்கைக்கும் ஏனையகொள்கைகள் சிறிது சிறிது மாறுபட்டிருக்கும். மாறுபடினும்யாவும் சைவமே. எமதுசமயம் "கிறிஸ்தவசமயத்தினுங் கீழிட்டசமயம்,, என்றார். சத்து அசத்து என்னுஞ் சொற்களையே கேட்டறியாத கிறிஸ்தவர்களை நாம் ஏமாற்றினதாகமுன் கூறினர்; இப்போது கிறிஸ்தவசமயத்தினுங் கீழிட்டசமயமென்றார். இதனால் நாம் சத்து அசத்து என்னுஞ்சொற்களைக்கேட்டறிந்தவர் வகுப்பில் சேர்ந்து, அம்மதத்தினும் நமது மதம் மேலென்றாகின்றது. சத்து அசத்தென்னும் சொற்களைக்கேட்டேயறியாதவர் அதைப்பற்றி அவர்கள் பேசப் போகின்றதில்லை. அதைப்பற்றி நாம்பேசுகின்றமையால் அவர்களைவிட நாம் மேலுக்கு மேலாகின்றது. அன்றி அவர்களை நாம் ஏமாற்றுகிறதாகச் சொல்லுகின்றார். அவர் கூறுவதுபோல் விஷயமறியாதார்களையும் ஏமாற்றப்பட்டவர்களாயுமுள்ள கிறிஸ்தவர்களைப்பார்க்கிலும் விஷயமறிந்தவர்களாயும் ஏமாற்றினவர்களாயுமுள்ளவர்கள் கீழிட்டவர்களாவது யாங்ஙனமமையும்? இது முன்பின் முரணன்று? வேதாந்தவிசாரணைசபையாரைநாமாகக்கருதிப்பேசினமையால் அதற்குப்பதிலுமவ்வாறே கொடுக்கப்பட்டது. நமக்கும், அத்வைதி யல்லது சித்தாந்தியார்க்கும் வாதமிருக்க, ஆர்க்கோணம் சைவசித்தாந்தியார் ஏதேனும் பேசவேண்டுமாயின் அவ்விஷயவரையில் பேசாது, சொன்ன விஷயத்தைமறைத்ததாகவும், சொல்லாதவிஷயத்தைச் சொன்னதாகவும் சொல்லிப்பழிபோட்டு இஷ்டப்பிரகாரந் தூஷித்து, கிறிஸ்தவசமயத்தினும் கீழிட்டசமயமென இகழ்ந்து எழுதுவது தருமமா? நிற்க, ஏகாத்மவாதமென யாம் ஒதுக்கிப் பரிபவப்படுத்தாதவகை அறிவே உலகமென்பதைச் சாதித்துக்கொள்ளுங்கள்பார்ப்போம்,, என்கின்றனர். ஏகாத்மவாதம் என்பதில் குற்றம் ஒன்றுமில்லையே. குற்றமிருப்பதாகவுரைப்பது, கரும்புகசப்பது நாவின் குற்றம் போன்றதாம். ஏகாத்மா என்பது ஜீவாத்மா விஷயத்திலா? பரமாத்மா விஷயத்திலா? ஜீவாத்மா விஷயத்திலெனின் நாமதற்குடன்படோம்; பரமாத்மாவிஷயத்தெனில் அதில் யாதுங் குற்றமின்றென்க. ஒதுக்கிப் பரிபவப்படுத்தாத வகையென்று சொன்னதில் நாமிக விசனப்படுகின்றோம். நாமப்படிப்பட்ட குற்றமொன்றுஞ் செய்யவில்லையே; ஏன் நம்மை ஒதுக்கவேண்டும்? பரிபவப்படுத்தாமல் ஏன்சைவிடவேண்டும்? நாமறிந்தமட்டில் மனோசாட்சிக்கு விரோதமின்றிப் பேசுதல் ஆர்க்கோணஞ்சைவசித்தாந்தியார்க்குச் சம்மதமில்லையோ! குற்றத்தைச்சாடிக் குணத்தில் திருப்புவது அவருடைய கடமையேயாகலின் நங்கொள்கையைச் சுருதி யுக்தி அநுபவங்களால் மாற்றி, ஒதுக்காமல் பரிபவப் படுத்தக் கேட்டுக்கொள்ளுகின்றோம். அவ்வாறின்றிச் சொன்னதையே நம்பவேண்டும், நம்பாவிடில் ஒதுக்கிவிடுவோம், அன்றிப்பரிபவமும் படுத்தமாட்டோம் என்பாராயின் அவரால் ஒதுக்கப்பட்டுப் பரிபவம் பெறுமவிருப்பதே உத்தமோத்தமமென்றிருப்போம். "அறிவே உலகமென்பதைச்சாதித்துக்கொள்ளுங்கள் பார்ப்போம்,, என்றுகூறிய சபதத்திற்கு யாம் யாதுரைக்கப்போகின்றோம்! சபதங்கூற எம்மாலாகாதென்று முன்னரே கூறியுள்ளாம். நமது மனத்திற்கின்று நியாயமென்று தோன்றியது நாளைநமக்கே நியாயமன்றெனத்தோன்றும். நம்மைவிட அதிகமாக எத்தனையோ புத்திமான்களிருக்கின்றார்கள்; மகா மகா பண்டிதர்களிருக்கின்றார்கள்; மகாமகோபாத்தியாயபட்டம்பெற்றவர்களு மிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட யானைபோன்றவர்களுக்கெல்லாம் ஏது ஏது என்னென்ன விதமாய்த்தோன்றுமோ! அவர்களுக்கும் இன்று ஒரு விஷயம் ஒருமாதிரி தோன்றினால், நாளை, அதுவே யாறித்தோன்றுகின்றது. அப்படியிருக்க ஒன்றுமறியா நான் என்னமோ சொல்லிவிட்டதை எப்படிச் சாதித்துக்கொள்ளமாட்டுவேன்? அப்படிச்சாதிப்போமேயாகில் எம்மை அகங்காரியென்றும், அறிவீனனென்றும் ஒதுக்கிவிடவேண்டும்; அன்றிப் பரிபவப்படுத்தவும் வேண்டாம். "சொற்சுருங்கியும், பொருள் விளங்கியு முண்மை தோன்றவுரையுங்கள்,, என்றார். பரம ஆப்தராயிருப்பதால் சொற்சுருங்கியும் பொருள் விளங்கியுமுரைக்கச் சற்புத்தி யுரைக்கின்றார். அஃதுண்மைதான். அவ்வாறு அத்வைதி, அல்லது சித்தாந்தியாருக்குஞ் சற்புத்தியுரைக்கவில்லையே என்று மாத்திரந்தான் சிந்திக்கின்றோம். நாமாத்திரம் பெரியப்பனும் அவர்மாத்திரஞ்சிற்றப்பனுமா? இவ்விடயத்தில் நமக்கு மாத்திரம் அநுகூலமாகப்பேசவேண்டிய காரணமென்னே? எல்லாவிஷயங்களிலுமவர்க்குச் சாதகமாகவும் நமக்குப் பாதகமாகவும்பேசி, இவ்விஷயத்தில் மாத்திரம் அவர்க்குப் பாதகமாகவும் நமக்குச்சாதகமாகவும்பேசியது நமக்கு நல்லகாலம்போலும்! உண்மை தோன்ற வுரையுங்களென்றுகூட வுரைந்தார். நாம் இதுகாறுமுண்மையைவிட்டு என்னவுரைந்தோமோ அறிகிலேம். அத்வைதி அல்லது சித்தாந்தியார் மாத்திரம் மெய்யைச்சொன்னதென்ன? நாமாத்திரம் பொய் பேசினதென்ன?

சொற்சுருங்கியும் பொருள் விளங்கியுமுரைக்கச்சொன்னது சற்புத்தியேயாயினும் அது பத்திரிகைகளுக்கு மாத்திரம் தக்கதன்று. பத்திரிகைகளை வாசிப்பவர்கள் பெரும்பாலும் சாமானியப்படிப்புள்ளவர்களே. நாம் சுருக்கஎழுதுவோமாயின் அவர்கள் பிறரிடஞ்சென்று பொருள் கேட்பார்கள். பிறரிடஞ்சென்று அர்த்தங்கேட்டதைப் பார்க்கிலும் நாமே விளக்கவுரைத்தல் நன்றென்று கருதியே நாமும்பிரதிவாதியாரும் விரித்தெழுதலானோம். இவ்வபிப்பிராயத்தை யனுசரித்துத் தான்பத்திரிகைகள் எழுதிவருகின்றார்கள். நாம் விரித்தெழுதினதாகப்புத்திகூறும் ஆர்க்கோணம் சைவசித்தாந்தியார் மாத்திரம் சுருக்கியுரைத்தனரா? அவர் கொஞ்சமாக விஷயமெழுதினரேயன்றி மற்றப்படி சொற் சுருக்கப்பொருள் விளங்கவுரைந்தாரில்லையே தாம் முழநீளம் மகுடந்தரித்ததை நோக்காது அம்மகுடத்திற்குச் சிறிதுகூட பேற்படாத எமது மகுடத்தைமாத்திரம் முழநீளமென்று பரிகசித்த ஆர்க்கோணம் சைவசித்தாந்தியார்க்கு யாம்யாதுரைக்கினும் பயன்படுமோ? அவர்எழுதுவதுநியாயமன்றென அவர்சித்தமே யிரங்கினாலன்றிநாமதிலுரைப்பதிலென்னலாபம்? எதிரிஎந்த ஆயுதமெடுத்து யுத்தஞ்செய்கின்றனரோ அந்த ஆயுதத்தைத்தான் தாமும் எடுத்து யுத்தஞ்செய்யவேண்டும். எதிரி வெறுங்கையராயின் தாமும் வெறுங்கையராயிருப்பதன்றி அஸ்திரமெடுக்கப்படாது. அங்ஙனமே நாம் தூஷணம்

என்னும் அஸ்திரத்தை எடுக்காது வெறுங்கையாயிருக்கும் போது அரக்கோணம் சைவசித்தாந்தியார் தூஷணாஸ்திரம் நம்மேல் பிரயோகிப்பது தருமமா? நமதுகையில் தூஷணாஸ்திரமில்லையாகலின் இனி அவர்முன்போல் தூஷணாஸ்திரம்பிரயோகிக்காமலிருக்கக் கோருகின்றோம்.

வேதத்தையாதாரமாகக் கொண்ட மதங்கள் பலவாயிருக்கின்றன. அவற்றில் உண்மையாயுள்ளது ஒன்றுதானிருக்கவேண்டும்; ஒரேகொள்கையில் அவரவர் வேறுவேறு அபிப்பிராயங்களிருக்கின்றமையால் யாவுமே உண்மையென்று கூறுதற்கமையாது. உண்மை யாதென நோக்கவேண்டின் யுக்தி அநுபவங்களுக்கு மாறின்றி யிருக்கவேண்டும். அந்தந்த மதவாதிகள் சொல்வதையே நம்பவொண்ணாது. நம்பவேண்டுமெனில் யாவருடையகொள்கைகளையுமே நம்பவேண்டும். அக்கொள்கைகள் ஒன்றோடொன்று முரணுகின்றமையால் எவ்வாறு நம்புதற்கமையும்? ஆகலின் அபிமானமற்று மனோசாட்சிக்கு மாறின்றி நடுவுநிலைமையாய் நின்று உண்மையை யாராய்ந்து தெளியவேண்டும். இஃது யாவர்க்குஞ் சம்மதமாம். ஆய்ந்துதெளிந்த நிலைமைக்கு ஏனையநிலைமைகள் சாதனங்களானமையால் ஒன்றினையும் குறைகூறுவதற்கிடமின்று. இனி உண்மையாதெனவாராய்தல் ஆவசியகமாம். அதற்கு யாவரும் சகோதிரர்களாயிருந்து ஒருவனை ஒருவர் இகழாமலும், பரிகசிக்காமலும், விஷயங்களில் ஒருவருக்கொருவர் மாறுபடினும் நட்புக்குமாத்திரம் குறைவு வாராமலும் வாதஞ்செய்யவேண்டும். ஒருவர்க்கொருவர் மனஸ்தாபத்துக்கிடந்தராமல் பேச அல்லது எழுதவேண்டும். மதம் யாவர்க்கும் பொது; எல்லோர்க்குஞ் சொந்தம். எந்தமதமும் ஒருபகுதியார்க்கே சொந்தமென்பதில்லை. ஆதலால் எல்லாமதங்களுக்கும் நாம் வேருகின்றே நமதுபுத்திக்கெட்டினமட்டில் பேசக்கடவேண்டும். அவரவர் தத்தமதங்களினின்று தத்தம்பெரியோர்சென்ற மார்க்கத்தில் செல்வதைப்பற்றி யாமொன்றுங் குற்றங்கூறவில்லை. பிறர் மதங்களையும் தம்மதத்தினையு மாராயவேண்டியவர்களுக்கே இவ்விஷயங்கள் வரைந்தாம்.

ஓர் நண்பன்.

"ஸ்ரீசிதம்பரப்ரஹ்மவித்யாமுத்ராக்ஷரஶாலாயாம்"
[illegible] முத்ரிதாநி புஸ்தகாநி

ஸ்ரீ [illegible] ஸ்தோத்ரவ்யாக்யாஸஹிதா.	௦	க	௦
ஸ்ரீ ஶங்கரபகவத்பாதவிரசிதா)([illegible])(ஸ்ரீ [illegible])([illegible])(	௦	க	௦
ஸ்ரீதீக்ஷிதேந்த்ரவிரசிதாஃ க்ரந்தாஃ			
ஸ்ரீ ஶிவ [illegible] ஸஹிதஃ ஶிவதத்த்வவிவேகஃ	௨	௦	௦
[illegible]	௦	௧௨	௦
ப்ரஹ்மதர்கஸ்தவஃ ஸவ்யாக்யா விவரணஞ்ச	௦	௮	
[illegible] ஸ்தோத்ரரத்நம் தத்வ்யாக்யாநஞ்ச	௦	௪	
ஶிவமஹிமகலிகாஸ்துதிஃ ... ஸ்ரீமஹாமஹோபாத்யாயஸ்ரீராஜஶாஸ்த்ரிவிரசித வ்யாக்யாஸஹித	௦	௭	௦
ஶிவ [illegible] (முத்ரிதம்)	௦	க	௦
ஸ்ரீராமாயணதாத்பர்யஸங்க்ரஹஃ)(ஸவ்யாக்யஃ)(	௦	௨	௦
ஸ்ரீபாரததாத்பர்யஸங்க்ரஹஃ)(ஸவ்யாக்யஃ)(	௦	௨	௦
ஸித்தாந்தலேஶஸங்க்ரஹஃ (முத்ரிதம்)	க	௦	௦
[illegible] பரீக்ஷா ஸவ்யாக்யா	௦	௨	௦
[illegible] ஸவ்யாக்யா	௦	க	௦
[illegible] (முத்ரிதம்) ததா ஸ்ரீ [illegible] ... ஸ்ரீ ஸ்ரீநிவாஸகவிவிரசித [illegible]	௦	க	௦
ஸ்ரீ [illegible] ஸ்துதிஃ [illegible]	௦	௦	௬
ஶிவகர்ணாம்ருதம். முத்ரிதம்			
ஸ்ரீ [illegible])([illegible])([illegible])(	௦	௦	௬
ஸ்ரீ [illegible] விரசிதம் [illegible]	௦	௦	௬
ஸ்ரீமஹாமஹோபாத்யாய ஸ்ரீராஜஶாஸ்த்ரிபிஃ விரசிதம் ஸ்ரீ [illegible] ஸம்ஹிதா [illegible]	௦	௮	௦
ஶ்லோகத்ரயீவ்யாக்யா முத்ரிதா.			
ப்ரஹ்மவித்யாபத்ரிகாவிர)(சிதம் [illegible] நாடகம்)(	௦	௫	௦
[illegible] நாடகம் முத்ரிதம்.			
அத ஸ்ரீ நாராயணஶாஸ்த்ரிப்ரணீதாநி புஸ்தகாநி.			
[illegible] நாடகம்	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible] விஜயஃ ([illegible])	௦	௬	௦

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press. Chidambaram.